Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 29 (21.02.2004) சனிக்கிழமை இதழ்:143

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P:0602212472

(சி/2228)







## மோட்டார் சைக்கிள் படையணியின் அணிவகுப்பை பிரபாகரன் ஏற்றார்!

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் மோட்டார் சைக்கிள் படையணியினர் விசேட பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் நிகழ்வு நேற்று வன்னியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டார்.

புலிகளின் விசேட படையணியினரின் மோட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோரின் உறவினர் யாழ்ப்பாணத்தில் நேற்று மறியல்!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர் நேற்றுக்காலை யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தின் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.குடாநாட்டில் காணாமற்போனவர்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டு, கட்டம் கட்டமாக விசாரணைகள் மேற்கொள்ளப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

# யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியல்; இன்றைய கூட்டத்தில் இறுதி முடிவு!

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான இறுதி முடிவு இன்று எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.**

இன்று காலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் யாழ். நகரில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திலேயே கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்படவுள்ள வேட்பாளர்கள் பற்றிய முடிவு அறிவிக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

இந்த வேட்பாளர் பட்டியலில் கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்த மாவை சேனாதிராசா, ந.ரவிராஜ், கஜேந்திரகுமார், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சி.வி.கே. சிவஞானம், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா, சிவமகாராசா ஆகியோர் அரசியல் கட்சிகளின் சார்பிலும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கோலாகலமாக தமிழீழ தேசிய விளையாட்டு விழா!

(கிளிநொச்சி)

## திருகோணமலை மாவட்டத்தில் சம்பந்தன் தலைமையில்

# தமிழீழ தேசிய விளையாட்டு விழா!



(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் மூன்றாவது தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழா கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் கோலாகலமாக நேற்று ஆரம்பமானது.

நாதஸ்வரக் குழுவினரின் மங்கள இசை, பாண்ட் வாத்தியக் குழுவினரின் இசை முழங்க கேணல் சங்கர், லெப்டினன்ட் கேணல் விக்ரர், மேஜர் அல்பேட், லெப்டினன்ட் கேணல் புலேந்தியம்மான், கப்டன் அன்பரசி, லெப்டினன்ட் சந்திரன், மேஜர் சோதியா, கப்டன் திலகா, லெப்டினன்ட் சதா ஆகிய 9 மாவீரர்களின உருவப் படங்களும் தாங்கிவர மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த வீரர்கள் அணிவகுத்து வந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறை பொலிஸ் அணியை படையினர் திருப்பியனுப்பினர்!

(வவுனியா)

தமிழீழ விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு சென்ற அம்பாறை மாவட்ட பொலிஸ் அணியை ஓமந்தை சோதனை சாவடி ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு செல்ல இராணுவத்தினர் அனுமதி மறுத்தனர்.

போட்டிகளில் கலந்துகொள்ளும் ஆர்வத்துடன் வந்த அம்பாறை பொலிஸ் அணி இதனால் ஏமாற்றத்துடன் மீண்டும் அம்பாறைக்கே திரும்பிச்சென்றது. கடந்த தமிழீழத் தேசிய விளையாட்டு போட்டிகளில் இந்த அணி கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

# சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பினர் போட்டி!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் - தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளது.

திருகோணமலை நகரில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கூட்டமொன்றில் - இந்தத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் நிறுத்தப்படவுள்ள வேட்பாளர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டன. (12 ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதப் போராட்டத்தை தமிழக மீனவர் இடைநிறுத்தினர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள், இந்திய தூதரக அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க தமது போராட்டத்தை நேற்று இடைநிறுத்தினர்.

இந்திய தூதரக அதிகாரி குமார் மற்றும் தூதரக சட்ட ஆலோசகர் றஞ்சித் ஆகியோர் நேற்று யாழ்.சிறைச்சாலைக்கு வருகைதந்து, உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை சந்தித்தனர்.

நேற்றுக்காலை 10.15 மணிமுதல் சுமார் 30 நிமிடங்கள் தூதரக அதிகாரிகள் கலந்துரையாடிய பின்னர் - இந்திய மீனவர்கள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்துவதாகத் தெரிவித்தனர். இதற்கமைய தூதரக அதிகாரியால் காலை 10.45 மணியளவில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய மீனவர்களுக்கு குளிர்பானம் கொடுத்து போராட்டம் நிறுத்தப்பட்டது.

தூதரக அதிகாரி குமார் இந்திய மீனவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் -

உங்களது விவகாரம் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடி, படிப்படியாக விடுதலை செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உண்ணாவிரப்போராட்டத்தை நிறுத்திக் கொள்ளுங்கள், எனக்கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, யாழ்.வைத்தியசாலையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

mail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

your friend in the skies...

# காணாமற்போனோரின் உறவினரை உயர்நீதிமன்றுக்கு வருமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோரின் வழக்கு தொடர்பாக பின்வரும் பெயர்களைக் கொண்டுள்ளவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாண உயர்நீதிமன்றுக்கு வருமாறு, காணாமற்போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பு அறிவிப்பு விடுத்துள்ளது.

சோபிகா மல்லிகா - 32, புது வீதி கொய்யாத்தோட்டம், பரமநாதன் புஸ்பவதி - 97/12 ஆனந்தன் வடலி வீதி அரியாலை, சின்னத்துரை ஆறுமுகம் - 12 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை, பாஸ்கரன் சகுந்தலாதேவி - கைதடி வடக்கு கைதடி, செல்வரட்ணம் இராசமணி - 441 கண்டி றோட் யாழ்ப்பாணம், குமார் கரோலினா - 31 பாக் றோட் குருநகர், தேவதாஸ் சுரேஸ்குமார் - 16/6 மத்தியூஸ் றோட் யாழ்ப்பாணம், மேரி ஆரவி லிண்டா நவிவியா 6 /3 மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணம்.

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புதுமுக விஞ்ஞானபீட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகவுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார். இம் மாணவர்களுககுரிய வகுப்புக்கள் கடந்த 9 ஆம திகதி ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட்டிருந்தும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் அது பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (94)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும்,

GRAMMAR, SPOKEN ENGLISH மேற்படிப்பு வரை

பதிவுக்கு:- அதிபர்

426(302), K.K.S வீதி,

யாழ்ப்பாணம். (சி-2237)


## மெய்வன்மைப் போட்டி

(சுதுமலை)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் அ.மு.அருணாசலம் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய கணக்காளர் ந.யோகேந்திரராஜா, யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் க.கவியன்பன், சு.ப. பவநீதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர். (91)

★ ★ ★

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூாியின் அதிபர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சுங்கத் திணைகளத் தலைவர் இ.சுந்தரமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

சுன்னாகம் றோட்டறிக்கழகம் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன.

இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் உரிய நேரத்தில் சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. (72)

# நான்காமாண்டு நிறைவு விழா!

(இணுவில்)

இணுவில் அம்பலவாணர் கலையரங்கத்தின் நான்காமாண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. இணுவில் கிழக்கு காரைக்கால் பகுதி இளைஞர்கள் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

கலை நிகழ்வுகளாக அ.அமிர்தலோஜனின் இசைக்கச்சேரியும், பத்மினி மகேந்திரனின் நெறியாள்கையில் அவரது மாணவிகள் வழங்கும் நடன நிகழ்வுகளும், அம்பலவாணர் கலையரங்கத்தினரின் ஆறாவது படைப்பான பொன்.சர்வேஸ்வரன் நெறியாள்கை செய்த செந்தாமரையெனும் வரலாற்று நாடகமும் இடம்பெறவுள்ளது.


**ராஜா** யாழ்ப்பாணம்.



விஜயகாந்த், வடிவேலு, பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த

**எங்கள் அண்ணா**

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-2197)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ஜோதிகா, ரம்பா, லைலா, விவேக் நடித்த

**த்ரீ றோசஸ்**

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

DUNGONS DRAEONS

(சி-2196)

**VARATHAN LEARNERS**

GOVERNMENT APPROVED DRIVING SCHOOL 'A' GRADE

T.P.0777 110868

- கனரக வாகனம் உட்பட சகல வாகனங்களும் செலுத்துவதற்குப் பயிற்சி அளிக்கப்படும்.
- பயிற்சி பெற்றவர்களுக்கு (பழகியவர்களுக்கும்) ஒருமாத காலத்துக்குள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு யாழ்ப்பாணத்திலேயே ஒழுங்குகள் செய்துதரப்படும்.

எமது சாரதி பயிற்சிப் பாடசாலையானது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு 'A' தரம் கொண்ட பாடசாலையாகும்.

குடாநாட்டு மக்களின் நலன், வசதிகருதி யாழ்.நகர், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மானிப்பாய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் கிளைகள் அமைக்கப்பட்டு அந்தந்த இடங்களில் சாரதிப்பயிற்சி வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- சிறந்த சாரதியாக விரும்பும் ஒவ்வொருவரும் தாமதிக்காது இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

வரதன் லேனர்ஸ் VARATHAN LEARNERS

1. யாழ்.நகர் - வரதன் லேனர்ஸ், இல 133 கே.கே. எஸ்.வீதி (கூட்டுறவுக் காரியாலயம் அருகில்)
2. சாவகச்சேரி - நவீன சந்தை, மேல்மாடி
3. நெல்லியடி - மனோ தொலைத்தொடர்பகம், கொடிகாமம் வீதி T.P.021 2263072
4. அச்சுவேலி - சபா தொலைத்தொடர்பகம் (தியேட்டர் அருகில்) T.P.070 212359
5. சுன்னாகம் - யாழ்.லேனர்ஸ், பஸ் நிலையம், கந்தரோடை வீதி
6. மானிப்பாய் - விதுஷன் லேனர்ஸ், சங்கரப் பிள்ளை வீதி - T.P.0777 111348

- CC வகுப்பு லைசென்ஸ் வைத்திருப்போருக்கு அதனை 'A' வகுப்பிற்கு மாற்ற (பயிற்சியுடன்) குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும். (சி-2235)


**அறிவித்தல்**

**கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**இராமநாதன் நுண்கலைக்கழகம்**

**கல்வியாண்டு - 2003/2004**

இராமநாதன் நுண்கலைக்கழகத்திற்கு கல்வியாண்டு 2003/2004 ல் இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் 23.02.2004 திகதியன்று ஆரம்பமாகின்றது.

அன்றையதினம் காலை 9.30 மணிக்கு, இசைத்துறை விரிவுரை மண்டபத்தில் புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு நடைபெறும். புதுமுக மாணவர்கள் அனைவரும் இதில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்.
20.02.2004 (சி-2242)


**யசோ இறபர் ஸ்டாம்**

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

உங்களது அனைத்து தகவல் தொழில்நுட்ப தேவைகளுக்கும்...

**SICS கணனி சேவைகள்**

**125A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

10 வருடங்களாக சேவையாற்றிவரும் எமது நிறுவனம் வாடிக்கையாளர்களின் நலன் கருதி இன்று முதல் புதிய இடத்திற்கு மாற்றப்படுகிறது.

உங்களை அழைப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றார்கள் - நிர்வாகிகள் & ஊழியர்கள்

**SPECIAL OFFER ON HP PRODUCTS**

உங்கள் வருமானத்திற்கு ஏற்ற விலைகளில்!!



hp PHOTOSMART 145+ Digital Camera bundle offer



hp Mobile Printer 450CBI



hp deskjet 3550 print confidence



hp ScanJet 4570C



hp All-in-one 4110



hp SJ2400C Scanner



hp Pavilion PC



hp LaserJet 1010

*And Many More...*

- Computers / Laptop -Intel / AMD / Celeron
- Branded Servers,
- Computer Accessories
- Network Accessories and Tools,
- Scanners - HP / Genius / Acer / Mercury,
- Printers - HP / Epson / Canon / Dotmatrix
- UPS ✪ Stabillizer, etc.

**Our Authorised Dealers**

PCS, hp, COMPAQ, CISCO SYSTEMS, FLUKE networks, FOCUS, MITSUBISHI CHEMICAL, Genius, Verbatim, Microsoft, PLANET, KTC, SONY, WEDGE

*Free Photo for our Customers

*Lucky Dip for kids with every purchase of HP products

**Offers valid until stocks last, valid till Feb 29th, 2004**

***Please fill coupon & enter Lucky Draw & win prize***

கூப்பனை ஒன்றினை நிரப்புவதன் மூலம் பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்.

OUR SERVICES

Sales, Repairs & Maintenance, Networking, Web Designing, All kind of Software Developing & Maintenance, etc.

காட்சியறை இன்று பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படும்

(637)

# அரசியல்வாதிகளையோ, சிங்களதேசத்தையோ தமிழ் மக்கள் ஒருபோதும் நம்பியிருக்க முடியாது!

## அம்பாறை மாவட்ட படையணித் தளபதி சச்சு மாஸ்டர்

எந்த அரசியல்வாதிகளையும், சிங்கள தேசத்தையும் தமிழ்மக்கள் நம்பியிருக்க முடியாது. எமது இருப்பையும், எமது பாதுகாப்பையும் நாமே உறுதிப்படுத்தவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்டப் படையணித் தளபதி சச்சு மாஸ்டர் கூறினார்.

நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் நடைபெற்ற "அம்பாறை மாவட்ட தமிழின உயிர்க்கொலை நாள்" நிகழ்வில் சிறப்புரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட மக்கள் பெரு மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வையொட்டி அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்கள் பலவற்றிலிருந்தும் கடந்தகால தமிழினப் படுகொலைகளைச் சித்தரிக்கும் ஊர்திகள், வாகனப் பேரணிகள் உட்பட மக்கள் பேரணிகளும் தர்மசங்கரி மைதானத்தை நோக்கி வந்தடைந்தன.

அம்பாறையில் தமிழர் பிரதேசங்களெங்கும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டும், வர்த்தக நிலையங்கள், அலுவலங்கள், பாடசாலைகள் மூடப்பட்டும் பெரும் சோக சூழ்நிலை நிலவியது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் நிகழ்ந்த தமிழினப் படுகொலைகளையும், குறிப்பாக, உடும்பன் குளப்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 108 தமிழர்கள் நினைவாகவும் - தாண்டியடிப் பகுதியில் தூபி ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல்லும் நடப்பட்டது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் எஸ்.விவேகானந்தன் தலைமையில் தர்மசங்கரி மைதானத்தில் பிரதான நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மகளிர் படையணித் தளபதி நிலாவினி பொதுச்சுடரை ஏற்ற, அம்பாறை மாவட்டத் தளபதி உமாராம் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து, உடும்பன்குள தமிழினப் படுகொலையில், கொலையுண்ட மா.திவவியநாதனின் தாயார் செல்வபாக்கியமும், மட்டு - அம்பாறை துணை அரசியற்பொறுப்பாளர் கிருஷன், மட்டு - அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறேமினி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா ஆகியோர் ஈகச்சுடரினை ஏற்றிவைத்தனர்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக "விழவிழ எழுவோம், விடுதலை பெறுவோம்" எனும் கோஷத்துடன் அம்பாறை மாவட்ட தமிழின உயிர்கொலை நாள் பிரகடனம் செய்யப்பட்டது.

நிகழ்வில் படையணித்தளபதி சச்சு மாஸ்டர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

"எமது தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் இனிமேலும் நடக்க முடியாது.

இதற்காக தமிழ்மக்கள் அனைவரும் நமது போராளிகளின் பின்னால் அணிதிரள்வதுடன், நமது படைகளைப் பலப்படுத்தவும் வேண்டும்.

இன்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நமது பல படையணிகள் உருவாகியிருக்கின்றன.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் பலமான படையணி உருவாகியிருக்கிறது.

இன்றைய நாள் அம்பாறை மாவட்டத்தின் ஒரு படுகொலை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதாவது, 1986 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதி உடும்பன் குளத்தில் சிங்கள இராணுவத்தினரும், சிங்கள ஊர்காவற்படையினரும் ஏனைய பொலிஸ் சக்திகளும் திட்டமிட்டு தமிழினப் படுகொலையை நடத்தியிருந்தன.

எமது விடுதலைப் போராட்டம் வளர்ச்சியுற்று வந்த நேரத்தில் திட்டமிடப்பட்டு, எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கும், ஒடுக்குவதற்குமாக இந்தப் படுகொலைகளைச் செய்திருந்தனர்.

இதைக் கண்டு எமது மக்கள் அஞ்சவில்லை, துணிந்தார்கள், போராட்டத்தில் இணைந்தார்கள், இன்று வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

எனவே, இந்தப் படுகொலைகள் எம்மைப் பொறுத்தவரை, எமது மக்களைப் பொறுத்தவரை அஞ்சும் விடயமல்ல.

நாங்கள் எமது விடுதலைக்காக கொடுத்த விலைகள் அதிகம். இந்த விடுதலைக்காக, இன்றைய சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக பதினேழாயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளோம்.

எண்பதாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்களைப் படுகொலை செய்தனர்.

இதனால், இன்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பல படையணிகள் உருவாகியிருக்கின்றன.

1986 இல் இன்றைய நினைவுகூரும் படுகொலைகள் நடக்கும்போது, எமது மாவட்டத்தில் மகளிர் படையணி இருக்கவில்லை.

ஆனால், இன்று நமது மகளிர் படையணி பெரும் படையணியாக மாறியுள்ளது. எனவே, நாம் நமது படைகளைப் பலப்படுத்தவேண்டும் எனத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா, மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் படையணித் தளபதி நிலாவினி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (07)

## ஐ.தே.மு அமைச்சர்கள் பலர் தேசியப் பட்டியலுக்கு முயற்சி!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்த பல அமைசர்கள் - தேசியப் பட்டியல்மூலம் நாடாளுமன்றுக்குச் செல்வதற்கு முயற்சிசெய்து வருவதாகக் கூறப்படுகிறது.

அமைச்சர்களாகப் பதவிவகித்த - ரவி கருணாநாயக்க, மகிந்த விஜேசேகர, எஸ்.பி. திஸநாயக்க, பந்துல குணவர்த்தன, ஜி.எல். பீரிஸ், ஜெயலத் ஜெயவர்த்தன, ஜோன் அமரதுங்க, ரிரோன் பெர்னாண்டோ ஆகியோரே தேர்தலில் போட்டியிடாமல், தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்ல போட்டிபோடுவதாக இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இவர்களுக்கு எதிராக, லஞ்ச ஊழல் ஒழிப்புக்குழுவில் புகார் செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

## ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தேர்தல் விஞ்ஞாபனம்

ஐக்கிய தேசியக் கட்சி 2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை முன்னிட்டு, புதிய கொள்கை ஒன்றைத் தயாரித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு முன்வைத்த கொள்கைகளின் அடிப்படையில், மேலும் சில புதிய திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இந்த தேர்தல் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், 2001 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட கொள்கைகளில் சில நிறைவேற்றப்படாமல் போயுள்ளன.

அந்த வகையில் நிறைவேற்றப்படாத முன்னைய கொள்கைகளை இணைத்து, புதிய திட்டம் முன்வைக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து அதனூடாக தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்புக்கள் குறைந்து போவதாகவும் கரு ஜெயசூரிய கூறினார்.

நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துக்களை தெரிவிக்கும்போதே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார். (01)

## இரு நாட்டு சர்வதேசக் குழுவினரே தேர்தல் கண்காணிப்புக்கு இணக்கம்

### தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலைக் கண்காணிக்க ஏழு சர்வதேச கண்காணிப்புக் குழுக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் - அதில் இரண்டு குழுவினரே இங்கு வர சம்மதம் தெரிவித்துள்ளதாக தேர்தல் திணைகளம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் திணைகளத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது -

போதிய கால அவகாசத்திற்கு முன் தமக்கு அழைப்பு விடுக்கப்படாமையால், நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கண்காணிக்க வரமுடியாதென ஐ.நாவின் தேர்தல் கண்காணிப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பாகிஸ்தான், நேபாளம், பிலிப்பைன்ஸ் மற்றும், பங்களாதேஷ் நாடுகளின் தேர்தல் திணைக்களங்களுக்கு தேர்தலைக் கண்காணிப்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் அவர்களிடமிருந்து இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

இவற்றிடமிருந்து சாதகமான பதில் கிடைக்குமென தேர்தல் திணைக்களம் நம்பிக்கையுடன் உள்ளது.

இதேவேளை, தேர்தல் திணைக்களம் விடுத்த வேண்டுகோளை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கொமன்வெல்த் அமைப்புகள் ஏற்றுள்ளன.

இந்த அமைப்புகளின் பெரும்பாலான தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே இலங்கைக்கு வந்துள்ளனர். இவ்வாறு வந்த இவர்கள் ஏற்கனவே தேர்தல்ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை சந்தித்துள்ளனர்.

இவர்களுடைய அடுத்த சந்திப்பு நேற்று ஒழுங்குபடுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தகுதியான வேட்பாளர்களை நிறுத்துவதில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு நெருக்கடி!

### அநுரா பண்டாரநாயக்கா கூறுகிறார்



லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட பல ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்கள் மக்கள் முன் செல்ல அஞ்சுகின்றார்கள். தற்போதைய நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியான வேட்பாளர்களை நிறுத்தமுடியாமல் உள்ளது.

இவ்வாறு, ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்கா, அத்தனகல தேர்தல் தொகுதியில் சுதந்திரக் கட்சியின் நடவடிக்கைகள் தொடர்பான விளக்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அத்தனகல தேர்தல் தொகுதியிலுள்ள மகர பகுதியில், மக்களால நிராகரிக்கப்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதேச அமைப்பாளரை, ஐக்கிய தேசியக் கட்சி அந்தப் பிரதேசத்துக்கு மீள பிரதேச அமைப்பாளராக நியமித்தமை, அந்தக் கட்சியின் அரசியல் வங்குரோத்து நிலையையே காட்டுகின்றது.

நான் பல தேர்தல்களைச் சந்தித்தவன். தற்போது, நடைபெறவுள்ள தேர்தலில் வெல்வதன்மூலம் எமது புகழை தெரியப்படுத்தவேண்டும்.

தற்போது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டில் பல அரசியற் கட்சிகள் இணைந்து வருகின்றன. எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலோடு, ஐக்கிய தேசியக் கட்சியை கலைப்பதற்கு மக்கள் பொறுமையை இழந்து காத்திருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளுடன் பலமான உறவை மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, ஒருபோதும் ஆட்சிக்கு வருவதற்கான அனுமதியை மக்கள் இனி வழங்கமாட்டார்கள்.

அத்துடன், வெகுவிரைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிக்கு கலைக்கப்படுவார். பிரதமர் பதவி ஜனாதிபதிக்கு தேவையாக இருந்தால் - ஜனாதிபதி அதனை பிரதமர் ரணிலிடமிருந்து எப்போதோ எடுத்திருப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொருளாதார கொள்கைகள் தெளிவற்றன

### பொருளாதார ஆய்வாளர்கள் கருத்து

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொருளாதார கொள்கைகள் தெளிவற்றதாக இருப்பதாக, பொருளாதார ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அண்மையில், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், தனியார்துறையினரை நமது பொருளாதார கொள்கை தொடர்பில் தெளிவுபடுத்தும் நிகழ்வு ஒன்றை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நடத்தியது.

இதில் பங்கேற்ற தனியார் துறையினர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம்வகிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியே, பொதுஜன முன்னணி ஆட்சிக்காலத்தில் தனியார்மயத்தை அறிமுகப்படுத்தியது என்பதைச் சுட்டிக்காட்டினர்.

முன்னணியின் தலைவர்கள், தொடர்ந்தும் வங்கி, போக்குவரத்து, மின்சாரம் போன்ற துறைகளை அரசாங்கமே நடத்திச்செல்லமுடியும் என்ற கருத்தை தனியார்துறையினர் தெரிவித்தனர்.

எனினும், பொதுஜன ஐக்கிய முன்னணியே இவற்றையும், சிறிலங்கன் எயார் லைன்ஸ், எரிவாயு மற்றும் ரெலிகொம் என்பவற்றை தனியார் மயப்படுத்தியது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். (01)

தற்சமயம் அவர்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியினர் கொடுக்கும் அழுத்தமே, தனியார்துறையை அவர்கள் விமர்சிப்பார்கள் என்பதையும் பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, தனியார் மயமாக்கலின் ஊடாக, 1997 ஆம் ஆண்டு 2.2 பில்லியன் ரூபாவை அரசாங்கம் வருமானமாகப் பெற்றுவந்தது.

அதேநேரம, கடந்த இரண்டு வருட ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில், தனியார்மயத் திட்டத்தின் மூலம், 20 பில்லியன் ரூபா வருமானமாகப் பெறப்பட்டுள்ளது எனபதும் குறிப்பிடத்தக்கது.



யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்த ஜாதிக ஹெல உறுமயவின் முதன்மை வேட்பாளர் விதாரண தெனிமேசானந்த தேரர் யாழ்.செயலத்துக்கு வருகை தருகிறார்.

# ஸ்கொட்லாந்துக்கு எதிரான போட்டியில் 240 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றி!

ICC U/19 CRICKET WORLD CUP
BANGLADESH 2004

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டிகளில் சிம்பாப்வே, நேபாளம், நியூஸிலாந்து, அயர்லாந்து ஆகிய அணிகள் நேற்றுமுன்தினம் நடந்த போட்டிகளில் வெற்றிபெற்றன.

கனடாவுக்கும், சிம்பாப்வேக்கும் போக்ராவில் நடைபெற்ற போட்டியில் சிம்பாப்வே 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி கனடாவைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

கனடா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து, 180 ஓட்டங்களைப் பெற்றது. கனடா அணி சார்பில் கேஷ்வனி 63 ஓட்டங்களையும், பஸ்தியாம்பிள்ளை 38 ஓட்டங்களையும் அதிகூடிய ஓட்டங்களாகப் பெற்றனர். பந்துவீச்சில் சிம்பாப்வேயின் அட்சயா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 36.2 ஓவரில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இதில் சிம்பாப்வே அணி சார்பில் கமரோன் ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது சிறப்பம்சமாகும். ஆட்ட நாயகனாக கமரோன் தெரிவுசெய்யப்பட்டார்.

சிட்டஹொங்கில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் உகண்டாவும் - நேபாளமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உகண்டா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

49.5 ஓவரில் உகண்டா அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

உகண்டா அணியின் சார்பில் வாம்பட்சி அதிகூடிய ஓட்டங்களாக 46 ஐப் பெற்றார். ஏனைய வீரர்கள் அதற்கும் குறைவான ஓட்டங்களையே பெற்றனர். நேபாள அணியின் லாமா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நேபாள அணி 48.1 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. நேபாள அணியின் சார்பில் கோகான் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஆட்டநாயகனாக கோகான் தெரிவு செய்யப்பட்டார்.

சவரில் நடந்த மற்றைய போட்டியில் நியூஸிலாந்து அணி - ஸ்கொட்லாந்து அணியை 240 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 389 ஓட்டங்களை பெற்றுக கொண்டது. இதில பி.ஜே வோட்டலிங் 154 ஓட்டங்களையும், பிராட் வில்சன் ஆட்டமிழக்காது 144 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து 33 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதில் சியாம் பரீட் மட்டும் 60 ஓட்டங்களைப் பெற்றார். காயம்காரணமாக ஸ்கொட்லாந்து அணிவீரர் ஒருவர் துடுப்பெடுத்தாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நியூஸிலாந்து அணி சார்பில் அன்ரன் டேல்சிச், கரேக் ஸ்மித் ஆகியோர்தலா இரண்டு விக்கட்டுக்களைக் கைப்பற்றினர். நியூஸிலாந்து அணியின் வோட்டலிங் போட்டியின் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

குல்னாவில் நடந்த இன்னொரு போட்டியில் அயர்லாந்து அணி பப்புவா நியூகினியை 70 ஓட்டங்களால் வெற்றி கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி கொண்ட பப்புவா நியூகினி அயர்லாந்தைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அயர்லாந்து 49 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 212 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பப்புவா நியூகினியின் பந்துவீச்சில் வலிவலி நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பப்புவா நியூகினி 38.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் அன்ரூ ரீடில்ஸ், அலன் சோல்றர் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் காரி சிட் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். அயர்லாந்து அணியின் அன்ரூ ரீடில்ஸ் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம் நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு சென்நீக்கலஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.கல்வி வலய கல்வி மேம்பாட்டு பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.இராசலிங்கம் பிரதம விருந்தினராகவும், நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு. எம்.எக்ஸ்.கருணாரத்தினம் அடிகளார், நாவாந்துறை நல்லாயன் கன்ரியர்மட தலைவி அருட்சகோதரி மேரி புனிதராணி ஆகியோர் சிறப்புவிருந்தினராக கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ்.மத்தியகல்லூரி அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பிரதமவிருந்தினராகவும், யாழ்ப்பாண மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (58)

யாழ்ப்பாணம் - நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலய நூறாவது தினமும், வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் இன்று வித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.வலய கல்விப்பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## விளையாட்டு

# தென்னாபிரிக்காவுடனான போட்டியில் நியூஸிலாந்து 5 ஓட்டங்களால் வெற்றி

(வெலிங்ரன்)

தென்னாபிரிக்கா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நடைபெற்ற மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டியில், நியூஸிலாந்து அணி 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 38 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்த அணியின் சார்பாக பப்ஸ் 67 ஓட்டங்களையும், அணித் தலைவர் பிளமிங் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டறிகள் அடங்கலாக 43 ஓட்டங்களையும், கெயின்ஸ், ஓரம் இருவரும் 20 ஓட்டங்களையும், ஸ்ரைஸ் ஆட்டமிழக்காமல் 27 பந்துகளில் 4 சிக்ஸ்சர்கள் 1 பவுண்டறி அடங்கலாக 45 ஓட்டங்களையும், மக்கலம் 24 பந்துகளில் 5 பவுண்டறிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 41 ஓட்டங்களையும் பெற்றனர். கடைசி 7.2 ஓவர்களில் ஸ்ரைஸ், மக்கலம் இருவரும் இணைந்து ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

மழை காரணமாக இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் 38 ஓவர்களாக குறைக்கப்பட்டது.



பந்துவீச்சில் கலிஸ், நிக்கிபோஜி, ஸ்மித் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் ஆடத்தொடங்கிய தென்னாபிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 38 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

தென்னாபிரிக்கா அணி சார்பில் அணித்தலைவர் ஸ்மித் 43, கிப்ஸ் 69, பிறின்ஸ் 45, நிக்கிபோஜி 24, பொலக் 17 பந்துகளில் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

தென்னாபிரிக்கா கடைசி 3 பந்துகளில் 18 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில், முதல் இரண்டு பந்துகளிலும் பொலக் இரண்டு சிக்ஸர்கள் பெற்று, மூன்றாவது பந்தில் ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றார். இதனால், தென்னாபிரிக்கா 5 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் ஸ்ரைஸ், விக்ரோறி, இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், கெய்ன்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் நடந்து முடிந்த 3 போட்டிகளில் நியூஸிலாந்து 2:1 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.

# மகாஜனாக்கல்லூரி முதலிடத்தில்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழைக்கோட்ட பாடசாலை மட்டங்களில் நடைபெற்ற மென்பந்து சுற்றுப் போட்டிகளில் முதலாம் இடத்தை மகாஜனாக் கல்லூரியும் இரண்டாம் இடத்தை யூனியன் கல்லூரியும் மூன்றாம் இடத்தை மல்லாகம் மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன. (72)

# ஈழத்தமிழருக்கு தார்மீக ஆதரவு; ஒவ்வொரு தமிழனதும் கடமை!

## அண்ணாநகர் கூட்டத்தில் வைகோ



10 ஆண்டுகள் என்னை சிறையில் அடைத்தாலும் நான் கவலைப்படமாட்டேன். எனது கொள்கையில் தொடர்ந்து உறுதியாக இருப்பேன் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உறுதியாகக் கூறினார்.

பொடா சட்டத்தின்கீழ் 19 மாதங்களாக சிறையில் இருந்த வைகோ விடுதலையானபின் முதன்முறையாக பொதுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் பேசினார். அவர் மேலும் பேசுகையில்-

என்னைப் பிணையில் விடாமல் 10 ஆண்டுகள் சிறையில் அடைத்திருந்தாலும், நான் கவலைப்படமாட்டேன். கொண்ட கடமை, கொள்கை, கோட்பாடுகளிலிருந்து நழுவமாட்டேன் இந்த வைகோ சிறைவாசம் என்னை ஒன்றும் செய்துவிடாது. என்பதை என்னை சிறையில் அடைத்தவர்களுக்கும் இந்த நேரம் புரிந்திருக்கும்.

சிறையில் இருந்தாலும் எனது கடமையிலிருந்து நான் விலகிவிடவே இல்லை. பிரதமருக்கும், வெளியுறவு அமைச்சருக்கும் நான் பல கடிதங்கள் எழுதினேன். அத்தனையும் தமிழர்கள் படும்பாடு குறித்தது தான். அவர்களும் என்னைப் போல பல நாடுகளில் சிறைவாசம் அனுபவித்தவர்கள்.

ஈழத் தமிழர்களின் அவலம் அனைவருக்கும் தெரியும். அவர்களுக்குத் தார்மீக ஆதரவளிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமை. ஈழத்தமிழனின் ஒரே பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் உள்ளனர். இதை சர்வதேச சமுதாயமே அங்கீகரித்துள்ளது.

தமிழன் எங்கே துன்பப்பட்டாலும் அவர்களுக்காக குரல் கொடுப்பான் இந்த வைகோ. அது ஈழத்தமிழனாக இருந்தாலும் சரி குஜராத் தமிழனாக இருந்தாலும் சரி மராட்டிய தமிழனாக இருந்தாலும் சரி.

இது நாட்டை ஆண்ட இனம். தமிழனுக்கு நிகரான வீரன் இந்த உலகில் எவரும் இல்லை.

ஜெயலலிதாவுடன் கூட்டுசேர்ந்ததன் மூலம் தனது நம்பகத் தன்மையை இழந்துவிட்டார் பிரதமர் வாஜ்பாய். இதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அத்தோடுநில்லாமல் ஜெயலிலதாவின் ஆட்சியை வாயாரப் புகழ்கிறார் வாஜ்பாய். இது பச்சை சந்தர்ப்பவாதம்.

1999 ஆம் ஆண்டு வாஜ்பாய் ஆட்சியை இதே ஜெயலிலதா தான் கவிழ்த்தார். அப்போது வாஜ்பாய்க்கு ஆதரவாக உறுதியாக நின்றவன் இந்த வைகோ. அந்த நன்றியை மறந்துவிட்டார் வாஜ்பாய்.

குருஷேத்திரத்தில் பீஷ்மரை எதிர்த்து நின்றான் அருச்சுனன். அதேநிலையில்தான் நானும் இப்போதும் இருக்கின்றேன். மதசார்பின்மையைக் கட்டிக் காக்காதுவிட்டால் நாடு சிதறுண்டுவிடும். பா.ஜ.கவை எதிர்த்து மிகக் கடுமையானகணை தொடுப்பேன்.

தம்பி வெளியே கடமை இருக்கிறது. வெளியேவா என்று என் அண்ணன் (கருணாநிதி) உத்தரவிட்டார். அதற்காகத்தான் வெளியே வந்தேன். அண்ணன் தலைமையில் நாற்பது தொகுதிகளிலும் வெல்வோம். அ.தி.மு.க. இந்தத் தேர்தலில் தோற்கடிக்கப்படும். அது நிச்சயம் நடக்கும் என்றார் வைகோ.

# சிவகாசி தொகுதியில் இம்முறை வைகோ போட்டியிடமாட்டார்

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. அவரது சிவகாசி தொகுதியில் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன் என்பவரை வேட்பாளராக ம.தி.மு.க. நிறுத்தியுள்ளது.

19 மாத சிறைவாசத்திற்குப் பிறகு முதல் முறையாக சென்னை அண்ணாநகர் பகுதியில் நடந்த மிகப் பிரமாண்டமான ம.தி.மு.க பொதுக் கூட்டத்தில் வைகோ பேசினார்.

அப்போது ம.தி.மு.க வேட்பாளர்கள் பட்டியலையும் அவர் வெளியிட்டார்.

அந்த அறிவிப்பு கூடியிருந்த ஆயிரக்கணக்கான ம.தி.மு.க தொண்டர்களுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. பட்டியலில் வைகோவின் பெயர் இல்லை. அற்கு மாறாக சிவகாசி தொகுதியில் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன் என்பவர் சிவகாசியில் போட்டியிடுவார் என்று வைகோ அறிவித்தபோது கூட்டத்தில் பெரும் அதிர்ச்சி காணப்பட்டது.

வந்தவாசி தொகுதியில் செஞ்சி ராமச்சந்திரனும், திருச்சியில் எல்.கணேசனும், பொள்ளாச்சியில் கடந்தமுறை போட்டியிட்டு வென்ற டொக்டர் கிருஷ்ணனும் போட்டியிடுவார் என வைகோ அறிவித்தார்.

வைகோவைத் தவிர முன்னாள் மத்திய அமைச்சர் கண்ணப்பனும் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை.

இன்றைய உலகம் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. புதுமை காண்பதில் விருப்பம் கொண்டவர்கள் இன்று வாழும் மக்கள். பழமைக்கும், புதுமைக்குமிடையில் இன்று பலத்த போராட்டம். வீடு வீடாக, நாடுநாடாக மக்கள் சுபீட்ச வாழ்க்கையே குறிக்கோளாகக்கொண்டுள்ளார்கள்.

கல்வி, கலாசாரம், பண்பாடு என்பவற்றால் சிறப்படைந்த ஒரு நாட்டைப் பின்பற்றித் தாமும் அவ்வண்ணம் வாழவேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர்கள். இன்று வாழும் மக்கள் - இந்தக் குறிக்கோளை அடிப்படையாகக்கொண்டே அடிமைத்தளையிற் சிக்கி, அந்நியரின்

காவலோ மிகவெளிது
கல்வியென்னும் உள்ளத்தே பொருள் இருக்க
ஊரெல்லாம் பொருள்தேடி உழல்வதென்ன?

மக்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாக விளங்குவது கல்வி. அறம், பொருள், இன்பம் பயப்பது கல்வி. அறநெறியைக் கடைப்பிடிக்க மக்களை வழிநடத்துவது கல்வி. அதீத வாழ்வுக்கு அருந்துணை புரிவது கல்வி. இத்தகைய கல்வியை - எதிரகாலத்தை நிர்ணயிப்பவர்களான இளஞ்சிறார்கள் மாத்திரமன்று, தற்காலப் பிரச் சினைகளை அலசி ஆராயவேண்டியவர்களாயிருந்தும் துரதிஷ்ட

# முதியோர் கல்வியின் முக்கியத்துவம்

அடிக்கத்திற்கு அடிபணிந்த நாடுகள் இன்று சுதந்திரத்திற்காகப் போரா டுகின்றன.

தம்நாட்டுக் கருமங்களைத் தாமே நிர்ணயிக்க முற்படுகின்றன. நாட்டின் நல்வாழ்விற்கு அவசியமான பற்பல திட்டங்களைத் தீட்டு கின்றனர். ஆனால், இந்தத் திட்டங்கள் தகுந்தமுறையில் இயங்கு வதற்கு இன்றியமையாததாக விளங்குவது மக்களின் மதிநுட்ப அறிவு. இந்த அறிவை அளிக்கவல்லது கல்வி. கல்வியின் சிறப்பை, அதன் வனப்பை, அதன் மகத்துவத்தை எவ்வண்ணம் எடுத்தியம்புவது.

வெள்ளத்தால் அழியாது
வெந்தணலால் வேகாது
வேந்தாலும் கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவின்றிக் குறைவுறாது
கள்வர்க்கோ மிக அரிது

வசமாகச் சிறுபராயத்தில் கல்வியென்ற கண்ணைப் பெறாத கபோதி களுங்கூட, கற்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்னும் முதுமொழியை மக்கள் அலட்சியம் செய்யக்கூடாது.

சிறப்பாக நாம் ஒரு நாட்டை எடுத்துக்கொள்வோம். கல்வி கற் றோரின் எண்ணிக்கை குறைவாகவிருக்கும் அந்நாட்டிலே, அக்கிரமம் தலைவிரித்தாடினால், அராஜகம் தாண்டவமாடினால், அநியாயம் குடிபுகுமானால் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. எழுத்தறிவற்ற அந்நாட்டு மக்கள் வாழ்க்கைக்கோர் குறிக்கோளற்றவர்களாய், குறுகிய மனப்பான்மையுடையவர்களாய், மூடநம்பிக்கையுடையவர்க ளாய், நடைப்பிணங்களாய் வாழ்க்கை நடாத்துவார்கள். நாட்டுப் பொரு ளாதாரத்தை நன்நிலைப்படுத்தும் சாதனங்கள் அவர்களிடமில்லை. பொருள் உற்பத்தியில் பழமைக்கொள்கைகளே அவர்களின் பரம்ப ரைச் சொத்து. அவற்றை அழுங்குப் பிடியாகப் பிடிப்பதே அவர்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிநிரல். மனித வர்க்கத்திற்குரிய அடிப்படை உரிமைகளைப் பற்றிய அறிவற்றவர்களாய், வாக்குரிமைகளை தகுந்தமுறையில் உபயோகிக்கும் வன்மையற்றவர்களாய், நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு, பணியாற்றவல்ல ஸ்திரமான அரசாங் கத்தை நிறுவும் ஆற்றல் அற்றவர்களாய் மக்கள் வாழ்வார்கள். இந்த நாட்டில் தீண்டாமை, உயர்வு-தாழ்வு, அகங்காரம், மதுபாவனை என்னும் இன்னல்கள் நாட்டின் நல்வாழ்வைச் சதா அழித்துக் கொண்டிருக்கும். பாமரமக்களை ஏமாற்றிப் படுகுழியில் வீழ்த்தவல்ல பகல்வேஷதாரிகள், சொந்த நோக்கத்திற்காகப் பொதுநலனைச் சூறையாடும் சுயநலப்புலிகள், பாட்டாளியின் கூட்டாளியெனப் பறை சாற்றி, தனிமனிதனின் சுதந்திரத்திற்கே உலைவைக்கும் போலிப்பூச் சாண்டிகள் - நாட்டில் ஏராளம், ஏராளம். நாட்டு மக்கள் இவ்வித இன் னல்களின் மத்தியில் இன்பமான வாழ்க்கை நடாத்த முடியுமா? என்பதை உங்களிடம் கேட்க விரும்புகிறேன். சமுதாயத்தில் இறுகப் பிணைந்து இரண்டறக் கலந்திருக்கும் இன்னல்களின் மூலகாரணத்தை நாம் அலசி ஆராய்ந்தால், அடித்தளத்தில் நாம் காணும் உண்மை அறியாமையே. எனவே, இன்றைய உலகம் முன்னேறிச் செல்வதற்கு முதியோர் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்பது வெள்ளிடைமலை.

முதியோர் கல்வியின் முக்கியத்துவத்தை நாம் உணர்வது மட்டும் போதாது. பொதுமக்கள் கல்விச் செல்வத்தைப் பெறும் வழி வகைகளையும் நாம் வகுக்கவேண்டும். பகல் முழுவதும் இயற்கையுடன் சமராடி இளைத்துவரும் ஏழைத் தொழிலாளியின் ஓய்வுநேரங்களை, இன்பகரமாகச் செலவு செய்ய அறிவுக்கலையை வளர்க்க சனசமூக நிலையங்கள் நிறுவப்படவேண்டும். அறிவைப் பெருக்கவல்ல சலனப்படக்காட்சிகள் , நாடகங்கள் ஆங்காங்கு இடம்பெற வேண்டும். நாட்டின் கல்விமான்கள் எல்லோரும் இன்புற் றிருக்க வேண்டுமென்ற பரஸ்பரக் கொள்கையுடையவர்களாய் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்' என்ற பரந்த மனப்பான்மையுடையவர்களாய்த் தங்கள் ஓய்வுநேரங்களில் நாட்டில் நிலவும் அறியாமை இருளை ஆணிவேருடன் களைய முன்வர வேண்டும். ஆசிரிய சமுதாயமே! விழித்தெழு! முதியோர் கல்வியின் முக்கிய பங்கு உன்கையில் தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்வியென்ற கண்ணைப்பெற்ற நீ நடுவூர் பழுத்த நன்மரமாக அறிவுக்கலையைச் சுரக்கும் அருஞ்சுனையாக விளங்கவேண்டும். உன் பேச்சிலும் மூச்சிலும் உண்மைத் தியாகமும், பரந்த நோக்கமும் உயர்ந்த இலட்சியமும் மிளிரவேண்டும்.

**ஏ.வி.நிசாந்தினி**

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்கு பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங் கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியஙகளை கீழ்வரும் கூப்பனைப்பூர்த்தி செய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்கு பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தின ரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :........................................

கற்கும் பாடசாலை :........................................

கற்கும் தரம் :........................................

வீட்டு முகவரி :........................................

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .......... திகதி .................... மாணவர் ஒப்பம்

**ஓவியப்போட்டி**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,தாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

இங்கே மடிக்கவும்





## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### கனடா

| | |
|---|---|
| நாட்டின் பெயர் | - கனடா. |
| மக்கள் தொகை | - 31 மில்லியன். |
| தலைநகர் | - ஒரவா |
| மக்கள் | - பிரித்தானியர், பிரான்ஸியர், ஜேர்மனியர் ஆகியோரின் வழித்தோன்றல்கள். |
| மொழி | - ஆங்கிலம், பிரெஞ்ஸ், மேலும் 53 தேசிய மொழிகள். |
| மதம் | - கத்தோலிக்கம், புரட்டெஸலாந்து. |
| தொழில்கள் | - கனிவளம், மரம், பத்திரிகை உற்பத்திப் பொருட்கள், வாகன உற்பத்தி. |
| பணம் | - கனடியன் டொலர். |




கனடாவில் ஆதிக்குடிகள் முதலில் வாழ்ந்தார்கள். இவர் கள் ஆசிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்தனர். பின்னர் பீங் கிங் நகரில் கி.பி 1000 ஆம் ஆண்டில குடியேறியுள்ளனர். 1934 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நாடுகள் தொடர்பான ஆய்வாளர் - கன டாவில் ஒரு பகுதியில் குடி யேறி, அதைப் பிரான்ஸின் மாநிலமாகப் பிரகடனப்படுத்தி னார். பின் அந்த நாட்டில் போராட்டம் ஆரம்பமானது. 1745 ஆம் ஆண்டில் பிரித்தானியர்களுக்கும். பிரஞ்சுக்காரர்களுக்குமிடையே போர் உண்டானது. 1763 இல் பாரிஷ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட் டது. இதன்மூலம் பிரித்தானியாவிடம் கையளிக்கப்பட்டது. கனடா இன்று செல்வம் மிக்க ஒரு நாடாகும். இங்கே அழகான பூங்காக்கள், மலைகள், பர பரப்பான நகரங்கள் காணப்படுகின்றன. கனடாவின் மிகப்பெரிய நகரம் ரொரண்டோ. உலகின் மிகநீண்ட கடலேரத்தை கனடா கொணடுள்ளது. மாபிள் மரமும், பிவர் என்ற விலங்கும் தேசிய சின்ன மாக கருதப்படுகின்றது. கனடாவின் முதலாவது பிரதமர் ஜோன் ஏ மக்டொனால்ட். உலகின் மிகப்பெரிய அதிசயமொன்று இந்தநாட்டில் காணப்படுகிறது. அது நயகரா நீர் வீழ்ச்சியாகும். அமெரிக்காவின் எல்லையுடன் அமைந்துள்ள மாகாணமான ஒன்ராரியோ காணப்படுகிறது. ஒவ்வொரு செக்கனிற்கும் 500,000 தொன் நீர் வீழ்கின்றது. இதனால் பாரியளவில் நீர் மின்சக்தி பெறப்படுகிறது.

## விடுகதையும் விடையும்

(1) ஒரு கரண்டி மாவில் ஊரெல்லாம் தோசை அது என்ன?
(2) வெள்ளை முட்டிக்குள் இரண்டு தைலங்கள் அது என்ன?
(3) உரிக்க உரிக்க தோல் அது என்ன?
(4) உரிச்ச கோழி சந்தைக்குப் போகிறது. அது என்ன?
(5) கண்ணை விட்டே கடைசிவரை ஒளி தருவான் அவன் யார்?

1. நிலா
2. முட்டை
3. வெங்காயம்
4. [illegible]
5. மெழுகுதிரி

ம.சிவகௌரி
தரம் - 6
பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை

**சிந்தனைக்கு!**
அரைகுறை அறிவு அரைக்கிணறு தாண்டு வதுபோல் ஆபத்தானது.



# சிறுவர் அரங்கம்

அன்புச் சிறுவர்களே!

உங்களின் ஆக்கங்கள் ஏனைய மாணவர்களுக்கு பயன் உள்ளதாக அமையுமாறு இருக்கவேண்டும். ஓவியப்போட்டிக்காக அனுப்பப்படும் உங்களின் கைவண்ணங்களை கடித உறையின் மேல் உறையுடன் ஒட்டப்படாமல் கவனமாகப் பார்த்து அனுப்பவும்.

மற்றும் நீங்கள் எழுதும் ஆக்கங்களை அழகான கையெழுத்தில் எழுதி அனுப்பவும். ( உங்கள் சகோ தரர்கள், அப்பா, அம்மாவிடம் கொடுத்து உறுப்பெ முத்தில் எழுதி அனுப்பவும்)

பிறர் உதவியின்றி நீங்களாகவே நிறையக் கதைகளை எழுதி அனுப்புங்கள். ஓவியப்போட்டிக்கான ஆக்கங்கள் இதுவரையில் போதுமானதாக வந்துசேரவில்லை. அத னால், ஆக்கங்கள் சேர்ந்ததும் பரிசுக்குரிய கைவண் ணம் தேர்ந்தெடுக்கப்படும். போட்டி முடிவுக்கான திகதியினை அறியப்படுத்துவோம்.

நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் சிறப்பாக இருக்கின் றன. இன்னும் சிறப்பாக அமையுமாறு முயற்சிசெய்து அனுப்பவும்.

## My Self

My name is Sivalinkam Kaseena. I live in Navindil. I am fourteen years old. My father's name is Sivalinkam. My mother's name is Prema. I study at J/karanavai Ponnampala Viddjalayam Girls College. I have sisters - Kalapana, Kancana, Karuna, Premana, Siyarna and one brother Pakirathen. My favourite subjects are English and Maths. My friend name is R.Kasitha. My favourite game is Net boll. I want to be an Accountant.

s.Kaseena
Grade - 10
Girls's College

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- வி.பிரசன்னா
கற்கும் பாடசாலை :-
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
கதை எழுதுதல், சித்திரம் வரைதல், கிரிக்கெட்.



முழுப்பெயர் :- உ.கீர்த்தனா
கற்கும் பாடசாலை :-
தாமோதர வித்தியாலயம்
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கதை வாசித்தல்.

முழுப்பெயர் :- யோ.காந்தரூபி
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- ம.டயஸ் பெர்னாண்டோ
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கலை, கால்பந்து.

முழுப்பெயர் :- பி.தொமஸ் அன்ரனி வேக்மன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர் :- த.நிருபன்
கற்கும் பாடசாலை :-
யாக்கரு விநாயகர் வித்தியாலயம்
தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள்:
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- ச.வி.ஜோன் கலிஸ்ரஸ்
கற்கும் பாடசாலை :-
புனித பத்திரிசியார் கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கணினி, இசை, சித்திரம்.

முழுப்பெயர் :- நி.சோனியா
கற்கும் பாடசாலை :-
சன்மார்க்க மகா வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
சங்கீதம், கவிதை, சித்திரம் வரைதல்.

முழுப்பெயர் :- ச.ஹம்சலா
கற்கும் பாடசாலை :-
இனுவில் மத்திய கல்லூரி
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :...............................
கற்கும் பாடசாலை :...............................
கற்கும் தரம் :...............................
வீட்டு முகவரி :...............................
பிறந்த திகதி :...............................
ஆர்வமுள்ள துறைகள் :...............................
...............................

............................ திகதி ............................ ஒப்பம்

............................ அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............................ பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



## உங்கள் கைவண்ணம்



இ.கௌரிநிஷா
தரம் - 10
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை



எல். தனுஷா
தரம் - 5

## உழைப்பு உயர்வைத் தரும்



வேணு ஒரு பையன். அவனுக்குச் சிறுவயதில் தந்தை இறந்துவிட்டார். அவனுக்கு வசதி இல்லாததால், ஐந்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டு, ஒரு அச்சகத்தில் வேலை பார்க்கச் சென்றான். அந்த அச்சகக்காரன் இரக்கமற்ற சுபாவம் உள்ளவனாக இருந்தான். அதனால், அவன் தாயிடம் வேறு வேலை வாங்கித் தரும்படி கெஞ்சினான். பின் தாய் தனக்குத் தெரிந்த ஒருவரிடம் வேலைக்கு அமர்த்தினார். புதிய முதலாளிக்கு அவன் மேல அன்பு ஏற்பட்டது. அவன அச்சடித்து முடிந்தவுடன், அச்சுப்போட்ட அத்தாளின் ஒரு பிரதியை வீட்டில் கொண்டு சென்று கட்டி வைப்பான். அவன் அதை வேலை முடிந்து ஓய்வுள்ள நேரத்தில் வாசிப்பான். அதில் சந்தேகமானவற்றை எடுத்து வைத்திருப்பான். ஒருநாள் அவன் பாடசா லைக்குச் செல்லும் மாணவனைக் கண்டு, இங்கு எவ்விடத்தில் தமிழாசிரியர் இருக்கிறார் என்று கேட்டான். அந்த மாணவன் இவ்விடத்திலிருந்து 4 ஆவது வீட்டில் இருக்கிறார் என்று கூறினான். சந்தேகமான கேள்விகளை எடுத்துக் கொண்டு ஒரு நாள் தமிழாசிரியரின் வீட்டுக்குச் சென்று, என்ன விடயங்களை அவரிடம் கேட்பது? எவ்வாறு அவரை கூப்பிடுவது என வாசற்படியில் நின்று யோசித்துக்கொண்டிருக்கும்போது, பின் பக்கத்தால் ஒருவர் வந்தார். 'தம்பி ஏன் நிற்கிறீர்? நீர் யார்? உமக்கு யார் வேண்டும்?' எனக் கேட்டார். வேணு 'தமிழாசிரியரைப் பார்க்க வந்தேன்' என்றான். 'நான் தான் தமிழாசிரியர், உமக்கு என்ன வேணும்' என்று கூறினார். 'சில சந்தேகமான கேள்விகளை தங்களிடம் கேட்டறிய வந்தேன்' என்றான் பையன். வேணு சந்தேகமான கேள்விகளை ஆசிரியரிடம் கொடுத்தான். ஆசிரியர் அதற்குக் கருத்துக்கள் கூறி, மீண்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் வா என்றார். ஆசிரியர் புலமைப்பரிசில் பரீட்சையில் விண்ணப்பம் எடுக்கலாமே என்றார். வேணு ஆசிரியரின் உதவியுடன் கல்வியில் முன்னேறினான். பல பட்டங்களை பெற்றான். ஆசிரியர் ஓய்வுநிலை காரணமாக வேணுவை தன் பாடசாலையில் கற்பிக்கும்படி கூறினார். வேணு நல்ல பேச்சாளராகவும், தமிழாசிரியராகவும் திகழ்ந்தான்.

லோ.தேனுஷா, தரம் - 6, விக்னேஸ்வராக் கல்லூரி

## நாட்டின் தேசிய விளையாட்டுக்கள்



1) அவுஸ்ரேலியா - கிரிக்கெட்.
2) இலங்கை - எல்லே.
3) பாகிஸ்த்தான் - ஹொக்கி
4) துருக்கி - மல்யுத்தம்.
5) ஜப்பான் - கராத்தே ஜுடோ.
6) ஸ்கொட்லாந்து - கால்பந்து
7) கனடா - பனிஹொக்கி
8) இந்தியா - ஹொக்கி, கபடி.
9) ஐக்கிய அமெரிக்கா - பேஸ்போல்
10) ஸ்பெயின் - ஜல்லிக்கட்டு.

ஸ்ரீ.கஸ்தூரி
தரம் - 6
அச்சுவேலி மத்திய கல்லூரி

## சாரணியம் பற்றிய சில தகவல்கள்

1. சாரணியத்தின் தந்தையின் பெயர் என்ன?
   - பேடன்பவல் பிரபு
2. சாரணியத்தின் தந்தை எப்போது பிறந்தார்?
   22.02.1857
3. சாரணிய தந்தை எத்தனையாம் ஆண்டு இராணுவத்தில் இணைந்தார்? 1876 ஆம் ஆண்டு தனது 19 வயதில்
4. சாரணியத்தை எத்தனையாம் ஆண்டு ஆரம்பித்தார்?
   1907
5. கடற்சாரணியம், பெண்கள் சாரணியம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1910
6. குருளைச் சாரணர் பிரிவு எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
   1916
7. திரிசாரணர் பிரிவு எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
   1918
8. வலது குறைந்தவர்களுக்கான சாரணியம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1925
9. இளைஞர் சாரணியம் என்ற நூல் எப்போது வெளியிடப்பட்டது? 1908
10. எத்தனையாம் ஆண்டு உலக சாரணர் சபை உருவாக்கப்பட்டது? 1920

| சாரணர் பிரிவுகள் | மகுட வாக்கியம் |
|---|---|
| குருளைச் சாரணர் | - இயன்றவரை திறமையாய் செய் |
| சாரணர் | - எதற்கும் தயாராய் இரு |
| திரி சாரணர் | - சேவை செய்வோம் |

சாரணர் சத்தியப் பிரமாணம் யாது?

என்னால் கூடுமானவரையில் எனது தேசம், சமயம் இவைகளுக்கு எனது கடமையைச் செய்யவும் - எக்காலத்திலும் பிறருக்கு உதவிபுரியவும், சாரண விதிகளுக்கு அமைந்து, பணிந்து நடக்கவும், என் கௌரவத்தின்மீது வாக்குறுதி அளிக்கிறேன்.

### சாரணர் விதிகள்

1. சாரணன் நம்பத்தகுந்தவன்.
2. சாரணன் பற்றுறுதி உடையவன்.
3. சாரணன் ஒத்துழைப்பவன்.
4. சாரணன் சிக்கனமானவன்.
5. சாரணன் பிராணிகளின் தோழன்.
6. சாரணன் மனமகிழ்ச்சி உடையவன்.
7. சாரணன் மற்றைய சாரணனின் சகோதரன்.
8. சாரணன் சிந்தனை, சொல், செயலில் தூய்மையானவன்.
9. சாரணன் வீரம் செறிந்தவன்.
10. சாரணன் எதையும் தாங்குபவன்.

பேடன்பவல் பிரபு எப்போது காலமானார்?
8.10.1941



முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய அதிபரும், சாரணியக் குழுவினரையும் படத்தில் காணலாம்.

# விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர் இன்னமும் வீடு திரும்பவில்லை!

## உறவினர்கள் தெரிவிப்பு

பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட வேளை கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 22 பேரும் நாகபட்டினம் திரும்பவில்லை என அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் பற்றி தகவல்களைப் பெற்றுத்தருமாறு வடமராட்சி வடகது கடற்தொழில் சங்கங்களின் சமாசத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமிறி மீன்பிடித்தொழிலில் ஈடு பட்டவேளை, இலங்கை மீனவர்களால் ஐந்து படகோட்டிகள் உட்பட 27 மீனவர்கள் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் 13 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவேளை, ஐந்து படகோட்டிகளையும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், மீனவர்கள் 22 பேரையும் கடற்படையின் உதவியுடன் இந்தியக் கடற்படையூடாக அவர்களின உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

இவர்கள் அனைவரையும், இலங்கை கடற்படையினர் பொறுப்பேற்றுச் சென்றிருந்தனர்.

எனினும், நேற்றுமுன்தினம் வரை அவர்கள் வீட்டுக்கு திரும்பவில்லை என நாகப்பட்டினத்திலுள்ள உறவினர்கள் - திருகோணமலையிலுள்ள உறவினர்களூடாக, வடமராட்சி வடக்கு, கடற்தொழில் சங்கத்துடன் தொடர்புகொண்டு, அவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.

இந்த விடயம்தொடர்பாக வடமராட்சி வடக்கு சமாசம் - யாழ்.மாவட்ட யுத்தநிறுத்தகண்காணிப்பு குழுவிடம் முறையிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு, அவர்கள் பற்றிய தகவல்களை இனறு பெற்றுத்தருவதாக கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்ததாக கடற்தொழில் சங்கத்தின் சமாசச் செயலாளர் க.சூரியகுமாரன் தெரிவித்தார்.



யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவரும் இந்திய மீனவர்களைப் பார்வையிட, கொழும்பிலிருந்து வந்த இந்தியத் தூதரக அதிகாரிகள் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரியைச் சந்தித்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# யாழ்.பல்கலைக்கழக முதலாம் ஆண்டு பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாததால் மாணவர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முதலாம் ஆண்டு பரீட்சை முடிவுகள் வெளிவராத காரணத்தால், மாணவர்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

முதலாம் ஆண்டு மாணவர்கள்- இரண்டு அரையாண்டுப் பரீட்சைகளை எதிர்நோக்கியிருந்தனர். அந்த இரண்டு பரீட்சைகளுக்குமான உரிய பெறுபேறுகள் இன்னமும் வெளியாகவில்லை.

இந்த நிலையில் கடந்த மூன்று மாதகாலமாக முதலாண்டு மாணவர்கள் எந்த விதமான கல்விச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாதநிலை காணப்படுகின்றது.

முதலாண்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை விரைவில் முன்னெடுப்பதற்கு உரிய நடவடிக்கையாக, அவர்களின் பரீட்சை முடிவுகள் வெளிவரவேண்டியுள்ளது.

பரீட்சை முடிவுகள் வெளிவருகின்ற சந்தர்ப்பத்திலேயே, மாணவர்களால் இரண்டாம் வருட கல்விகளைத் தொடரமுடியும் என்றும், சிறப்புப் பாடங்களைத் தெரிவு செய்ய வாய்ப்பு உண்டாகும் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர்.

மூன்று மாதகாலமாக எதுவித கல்விச் செயற்பாடுகளும் இன்றி இருக்கும் மாணவர்களின் நன்மை கருதி, பரீட்சை முடிவுகளை உடன் வெளியிட ஆவன செய்யுமாறு மாணவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.(ந)



காரைநகர் மணற்காட்டு அம்மன் தேவஸ்தானத்தில் அண்மையில் தீவக வலய மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டி இடம்பெற்றது. இன் நிகழ்வில் - கல்விப் பணிப்பாளர் வேணுகோபால் சாணிபதாசன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (91)

## சமுர்த்தி வங்கி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

பிரான்பற்றில் நாளை சமுர்த்தி வங்கிக்கட்டடம் திறந்து வைக்கப் படவுள்ளது.

காலை 10 மணிக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் இந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பி.எல்.திலகநாயகம்போல் கலந்துகொள்வார்.(ப)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : சி.தீசன்
முகவரி : பொன்னம்பலம் வீதி, காரைநகர்.

ஏழாவது அகவையில்



பெயர் : சி.கஜானன்
முகவரி : பொன்னம்பலம் வீதி, காரைநகர்.


# பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய அரங்கு

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்கம்- வளமான அரங்கப் பண்பாட்டு வளர்ச்சிக்காகப் பல்வேறுபட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதில் ஈழத் தமிழ் அரங்கில் ஆரம்பநிலை வளர்ச்சியை அடையாத துறையாகவுள்ள - பெண்கள் அரங்கத் துறையை விருத்தியடையச் செய்வதற்காகப் பின்வரும் செயற்பாடுகளைத் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது.

பெண்கள் ஆளுமை விருத்திக்கான அரங்க களப் பயிற்சிகள், பெண்கள் பிரச்சினைகளைப் பேசும் அரங்க ஆற்றுகைகளை பல்வேறு இடங்களிலும் மேடை ஏற்றுதல், பாரிய அரங்குகளில் பெண்களை ஈடுபடுத்தி, பெண்கள் பங்குபற்றும் பாரம்பாரிய அரங்க முயற்சிகளை ஊக்குவித்தல், பெண்கள் அரங்கு தொடர்பான கருத்துக்களை நடத்துதல், பெண்கள் அரங்கு தொடர்பான புத்தகங்களை, கட்டுரைகளை வெளியிடுதல்.

இந்த செயற்பாடுகளில் ஓர் அங்கமாக - எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 22 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் - பெண்கள் பங்குபற்றும் இரண்டு பாரம்பரிய அரங்க ஆற்றுகைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வினை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துடன், இணைந்து, செயல்திறன் அரங்க இயக்கம் ஒழுங்குசெய்துள்ளது. இதனைப் பார்த்துப் பெண்கள் அரங்கை வளப்படுத்துவதற்கு ஆரோக்கியமான ஆலோசனைகளைத் தந்துதவுமாறு நாடக ஆர்வலர்கள் கேட்கப்படுகின்றனர்.

இந்த நிகழ்வினை ஈழத்துத் தமிழ் நாடகத் தாய் என்று குறிப்பிடப்படுகின்ற கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் ஆரம்பித்துவைப்பார்.

நடைபெறவுள்ள நாடகங்களின் விபரங்கள் -

கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பங்குகொள்ளும் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து.

கைதடி - நாவற்குழி தெற்கு சக்கரம் கலை, கலாசாரம் மன்றப் பெண்கள் பங்குபற்றும் க.இ.கமலநாதன் நெறியாள்கை செய்த இராவநேசனன் வடமோடிக்கூத்து என்பன இடம்பெறும்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மாடியிலிருந்து வீழ்ந்த சிறுவன் மயக்கம்

வீட்டின் மாடியிலிருந்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவன், தவறி வீழ்ந்து மயக்கமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

ஜெயாளன் விதுஷன் (வயது 07) கெனடி வீதி, நாவாந்துறை என்ற முகவரியில் வசிக்கும் சிறுவன் - யாழ்.மத்திய கல்லூரியில் ஆண்டு 2 கல்விகற்கும் மாணவனாவார். (121)

### ஞான வைரவர் ஆலயத்திற்கு வைரவர் சிலை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்திலே அமைந்துள்ள ஞான வைரவர் ஆலயத்திற்கு வைரவர் சிலையொன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து வருகை தந்த சிற்பாச்சாரியார் ஒருவரே இந்த சிலையை வடித்துள்ளார்.

இதன் கண் திறப்பு விழா கடந்த சிவராத்திரி தினத்தன்று கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்தச் சிலையைக் கல்லூரியின் பழைய மாணவனும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனுமான கே.வேணுகோபன் அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (94)

### வருடாந்த ஒன்றுகூடல்

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் - கல்லூரி விவேகாணந்தர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஒன்றியத் தலைவர் செல்வரூபன் தலைமையில் நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வு - யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன், சன்மார்க்க வித்தியாலய அதிபர் ரி.நடராஜலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவர். (91)

# பாதீனியத்தைக் கட்டுப்படுத்த மருந்து விசுறும் பணி ஆரம்பம்

பாதீனியம் எனப்படும் ஒருவகைச் செடியை கட்டுப்படுத்துவதற்காக மருந்துகள் விசிறப்பட்டு வருகின்றன. இந்த பாதீனியச் செடியானது மனிதர்கள், விலங்குகள் என்பவற்றிற்கு தீமை பயக்கக்கூடியது. இதனால், இதனை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொணடுவரும் நடவடிக்கையில் பல அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

இந்தச் செடியைக் கட்டுப்படுத்துவதற்கென கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட விசேட மருந்து வகையொன்று பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனைப் பயன்படுத்தி இந்தச் செடியைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியு மெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட விவசாயத்திணைக்களம்மூலம், மேற்கொள்ளப்படும் இந்த மருந்து விசிறும் பணியானது, கமநலசேவை நிலையங்கள் ஊடாக கிராமமட்டங்களிலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாதீனியம் உள்ள இடங்கள் தொடர்பான தகவல்களை தந்துதவுவதன்மூலம் பொதுமக்கள் இந்தச் செடியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பங்கெடுக்கவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப் பகுதியில், அவர்களது உணவுக்காக் கொண்டுவரப்பட்ட ஆடுகளின் மூலமே இந்தச் செடி குடாநாட்டிலே பரவியதாக நம்பப்படுகிறது. (94)

# தையல் மனையியல் கண்காட்சி இன்று இந்துக் கல்லூரியில் ஆரம்பம்

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன், சண்டிலிப்பாய் பிரதேச பிரிவின் மகளிர் அபிவிருத்தி சம்பந்தமான தையல், மனையியல் கண்காட்சி - இன்று யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இரண்டு நாட்கள் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வானது - இன்றும், நாளையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுகிறது.

இன்றைய தொடக்க நிகழ்வின் பிரதம விருந்தினராக - யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மாவும், கௌரவ விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரட்ணமும் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி XI - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

இந்தத் தீவைப்பில் உயிரிழந்த குழந்தைகளின் கருகிய உருவத்தை தான் ஊடகங்களில் பார்த்து மனங்கலங்கிப் போய்விட்டதாகவும், பல நாட்கள் தான் உறக்கமில்லாமல் அவதிப்பட்டதாகவும் சரணடைந்த அந்தச் சிறுவன் - ஊடக



வியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தான்.

இதேபோல் அதேவருடம் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி ஜேர்மனியின் 'எசன்' நகரிலிருந்த அகதிமுகாம் ஒன்றின்மீது இவ்வாறான ஒரு தீ வைப்புத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலும் நள்ளிரவு வேளையிலேயே நடந்தது. 3 மாடிகளைக் கொண்ட அந்த அகதிமுகாமில் 2 ஆவது மாடியில் தங்கியிருந்த வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் (தாய், தந்தை மற்றும் 4 குழந்தைகள்) ஜன்னல் வழியாக மேலே இருந்து குதித்து காயங்களுடன் உயிர்தப்பினர். ஆனால், குடும்பத்தலைவியான 35 வயது பெண்மணிக்கு மட்டும் முள்ளந்தண்டில் முறிவேற்பட்டு இன்று வரை சக்கர நாற்காலியிலேயே வாழ்க்கை நடத்திவருகிறார்.

1980 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஜேர்மனி முழுவதுமாக அகதிகளுக்கு எதிரான (அனைத்து நாட்டவரும்) 860 தாக்குதல்கள் நியோ நாசிகளால் மேற்கொள்ளப்பட்டதாக 'லு கியூமானிட்டர்' என்ற பத்திரிகை தெரிவித்தது.

இதில் ஈழத்தமிழருக்கு எதிராக எத்தனை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை கண்டறியமுடியவில்லை. இது தொடர்பான மதிப்பீடுகளும், பதிவுகளும் நம்மவர்களால் மேற்கொள்ளப்படாததால், இவை கால ஓட்டத்தில் மறக்கப்பட்ட செய்தியாக ஆகிவருகின்றன.

அகதிமுகாங்களில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவும், அந்த முகாங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட இனவெறி-நிறவெறித் தாக்குதல்கள் காரணமாகவும் ஈழத்தமிழர்கள் 1980 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் - வாழ்விடப் பிரச்சினை ஒன்றை எதிர்நோக்க நேர்ந்தது. பிரான்சிலே அதுவும் பாரிஸ் நகரத்தில் இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது.

ஜேர்மனி, சுவிஸ், ஹொலெண்ட் போன்ற நாடுகளில் புகலிடம் தேடிச் செல்லும் ஒருவர் - எந்த இடத்தில் எந்த நகரத்தில் வசிக்கவேண்டும் என்பதை- அந்த நாடுகளின் உள்துறை அமைச்சின் கீழ் இயங்கும் காவற்துறையினரே தீர்மானித்தனர். அவர்கள் குறிப்பிடும் நகரத்தைவிட்டு அந்த நபர் வெளியே செல்ல முடியாது. ஆனால், பிரான்சில் இந்த நடைமுறை இருக்கவில்லை. பிரான்சில் நுழைந்து அரசியல் தஞ்சம்கோரிய ஒருவர் - அந்த நாட்டின் எல்லைக்குள் எங்கு வேண்டுமானாலும் செல்வதற்கும், வசிப்பதற்கும், வேலை செய்வதற்குமான உரிமை வழங்கப்பட்டிருந்தது. அகதிகள் எங்கு வசிக்கவேண்டும் என்பதை காவற்துறையினர் - தீர்மானிப்பதில்லை.

இதனால், பிரான்சிறகுப் புலம்பெயர்ந்த நம்மவர்கள் - தலைநகரான பாரிஸ் நகரையே தங்கள் வதிவிட நகராகத் தேர்ந்தெடுத்துக்கொண்டனர். பாரிஸ் நகரம் என்பது உலகப் பெருநகரங்களில் ஒன்று. கட்டடக் காடு என்று சொல்கின்ற அளவுக்கு நெருசல்மிக்க ஒரு நகரம். இந்தக் கட்டடக் காட்டுக்குள் முகவரியில்லாமல் நுழையும் நம்மவர்கள் - தங்களுக்கென்று ஒரு முகவரியைத் தேடிக்கொள்வதென்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் ஒருவர் - தனக்குத் தங்குவதற்கு இடமில்லை என்று கூறிக் கொண்டு காவற்துறைக்குச் சென்று, தங்குமிட அனுமதி (விஸா) கோரலாம். ஆனால், பிரான்சிற்கு அகதியாகச் செல்லும் ஒருவர் தனக்கென்று ஒரு தங்குமிடத்தைத் தேடிக்கொண்டு, அந்த இடத்துக்குரியவரின் சம்மதக் கடிதத்தை (பிரெஞ்சில் டொமசில் கடிதம்) வாங்கிக் கொண்டு காவற்துறைக்குச் சென்று வதிவிட அனுமதிகோரவேண்டும்.

1980 ஆண்டு முற்பகுதிகளில் பாரிஸ் நகரத்துக்குச் சென்ற ஈழத்தமிழர்கள் எவருக்குமே அவர்கள் அந்த நகரத்தில் காலடி எடுத்து வைத்த நேரத்தில் உறவினர்களோ - நண்பர்களோ இருக்கவில்லை.

இவர்களை அங்கு அழைத்துச் செல்லும் பிரயாண முகவர் - மெத்திரோ (நிலத்தின்கீழ் செல்லும் தொடருந்து) நிலையம் ஒன்றில் இறக்கிவிட்டுச் சென்றுவிடுவார்.

அநேகமாக அதிகாலை வேளையிலேயே இந்த தரையிறக்கம் நடைபெறும்.

கையில் பெரியளவுக்குக் காசிருக்காது. ஒரு ஐந்து பத்து டொலர்... ஆகக் கூட்டினால் ஒரு 200 பிராங் பணம் ஒவ்வொருவரிடமும் இருக்கும். நம்மவர்கள் குறைந்தது ஒரு மணிநேரம் அந்த மெத்திரோ நிலைய வாசலில் நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

வெள்ளையர்கள், கறுப்பர்கள், கட்டையான உயரமும் குட்டையான மூக்குமுடைய சீன, வியட்நாமிய இனத்தவர்கள் என்று இதுவரை பார்த்திராத மனிதர்களைப் பார்த்த மலைப்பில் நம்மவர்கள் திகைத்து நிற்பார்கள்.

அணி அணியாகச் சென்றுகொண்டே இருக்கும் வாகனங்கள் - குறைவில்லாமல் வந்துகொண்டும் சென்றுகொண்டும் இருக்கும் மக்கள் கூட்டம் - அவர்களுடைய பரபரப்பான இயக்கம் இதெல்லாம் அவற்றை பார்க்கும் நம்மவர்களுக்குப் புதுமையாக இருக்கும்.

வெள்ளைக்கார அழகிகள், அரபுநாட்டு அழகிகள், சீன், வியட்நாமிய அழகிகள், கறுப்பழகிகள் என்று விதம்விதமான பெண்களைப் பார்த்து கொஞ்சநேரம் ரசித்துக்கொண்டிருப்பார்கள்.

இந்தப் பிராக்குகளில் காலை 8.30 மணி, 9.00 மணி ஆகிவிடும்.

வயிறு லேசாக கடிக்க ஆரம்பிக்கும். அருகிலுள்ள உணவுவிடுதி ஒன்றில் நுழைந்து "**Tea please** என்பார்கள்"

அவர்களுக்குப் புரியாது - செகுவா ரீ (ரீ எண்டால் என்ன?) என்று திரும்பிக் கேட்பார்கள். (ரீக்கு பிரெஞ்சில் 'தே' என்பதாகும்) இது இவர்களுக்குப் புரியாது... திரு திரு என்று முழிப்பார்கள்...

உணவு விடுதியின் வழங்குநர் குடிப்பது போன்று கையில் "புவா கேல்க சோஸ் - (ஏதாவது குடிக்கப் போகிறீர்களா) என்று கேட்பார்.

நம்மவர்கள் சந்தோசத்தில் "**yes - yes**" என்பார்கள்.

"புவா கபே" (கோப்பி குடிக்கிறீர்களா?) என்று வழங்குநர் திருப்பிக் கேட்பார். இவர்கள் **Tea, Tea** என்பார்கள். அவர் நோ ரீ கபே" என்பார்.

நம்மவர்களுக்கு கபே என்பது கோப்பி என்று விளங்கிவிடும். "ஒகே கபே" என்பார்கள்.

கபே - உ - கபே ஒ லே? (கோப்பியா அல்லது பால் கோப்பியா) என்று வழங்குநர் திருப்பிக்கேட்பார். நம்மவர்களுக்கு புரியாது

ஒன்லி கபே என்பார்கள்

வழங்குநர் - சாதாரணமாக நாம் இங்கு தேநீர் குடிக்கும் மாபிள் கப் அளவில் 1/3 பங்கையுடைய மிகச் சிறிய கப்பில் கரியான தடிப்பான கறுப்பு நிறமுடைய ஒரு கோப்பியை கொண்டுவந்து கொடுப்பார். (இது சாதாரண கோப்பியை விட 4 மடங்கு தடிப்பான கோப்பி. இதை பிரெஞ்சில் பெற்றிகபே என்பார். இது பிரெஞ்சுக்காரர்கள் காலையில் விரும்பிக் குடிக்கும் ஒன்று.)

அது வாயிலே வைக்கமுடியாத அளவுக்குக் கசப்பாக இருக்கும்.

வாய்க்குள் அந்தக் கோப்பியை விட்டு குடிக்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் தவித்து பின்னர் ஒரு மாதிரி குடித்துவிட்டு - இஞ்சி திண்ட குரங்கு மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு, காசைக்கொடுத்துவிட்டு வெளியே வரும்போது - அழகிய பெண்களும், அழகிய பாரிஸ் நகரமும் அந்தக் கோப்பியைப் போல கசந்துவிடும்.

அதன் பிறகே அவர்களுக்குத் தாங்கள் ஒரு முகவரி இல்லாத நபர்கள்- ஒரு முகவரியை தேடிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் வரும்.

உடனே கூடவே ஒரு திகைப்பும், அடுத்து என்ன செய்வது, எங்கே செல்வது என்ற கேள்விகளும் பிறக்கும்.

எங்காவது கண்ணுக்குக்கெட்டிய தூரத்தில் தமிழர்களது தலைதெரிகிறதா என்று தேட ஆரம்பிப்பார்கள்.

அரைமணி நேரம், ஒரு மணிநேரம் தேடிய பின் எங்களுடைய நிறத்தையும், உருவ அமைப்பையும் கொண்ட சிலரைக் காண்பார்கள்.

ஓடிச்சென்று அண்ணை, தம்பி, அக்கா, தங்கச்சி நீங்கள் தமிழா என்று கேட்பார்கள்.

அவர்கள் நோ என்று தலையாட்டி சொல்லிவிட்டு சென்று விடுவார்கள். உண்மையில் அவர்கள் மெரிசீயஸ், மார்ட்டினிக், ரீ யூனியன், குவாட்லூப் ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்களாக இருப்பார்கள்.

பிரெஞ்சு காலணியாக இருந்த இந்த நாடுகளுக்கு, பாண்டிச்சேரியிலிருந்து மூன்று நான்கு தலைமுறைக்கு முன்னர் கொண்டுசெல்லப்பட்ட தமிழர்களின் வாரிசுகள்தான் இவர்கள். தமிழ் அடையாளத்தை இழந்த இவர்களுக்கு தற்போது பிரெஞ்சுதான் தெரியும். நம்மவர்களினால் தேடல் மீண்டும் ஆரம்பிக்கும். உண்மையான ஈழத்தமிழர்கள் புதிதாக வந்திருக்கும் அகதித் தமிழரைத் தூரத்தில் கண்டாலே - வழியை மாற்றி திரும்பிச்சென்று மறைந்து விடுவார். அவர்களை சந்தித்து கதைத்தால் தங்குவதற்கு இடம் கேட்பார்கள் என்ற பயம்தான் இதற்குக் காரணம். அவர்கள்கூட இருக்க இடமில்லாமல் ஒண்டி வாழ்பவராகத் தான் இருப்பார்.

இவ்வாறு தேடித்தேடி மதியம் கடந்து விடும். பசிவேறு வயிற்றைக்கிள்ளும். ஆனால், எதிர்காலத்தை நினைத்தால் சாப்பிட மனமிருக்காது.

தொடர்ந்து தேடித்தேடி அலுத்துப் போன நேரத்தில் ஒருவர் வந்து மாட்டுவார்.

*(தொடரும்)*

## அறிவியல் - எஸ்.ஜெயா -

# புதிய வரலாற்றுப் பறவை

*(நேற்றைய தொடர்ச்சி...)*

ஆகவே **CD** களில் இருக்கும் தகவல்களை மீளப்பெறுவதற்கான படிமுறைகளை இலகுவானமுறையில், படங்கள் மூலம் விளங்கப்படுத்துகின்ற கைநூல் ஒன்றும் அனுப்பப்பட்டிருக்கின்றது.

இந்தப் பறவையானது 2001 ஆம் ஆண்டு விண்வெளிக்கலம் ஒன்றில் இலவசபயணியாக ஏற்றிச்செல்லப்பட்டு, 14 ஆயிரம் **Km** உயரத்தில் $57^{0}$ சரிவான வட்டப்பாதையில் இறக்கிவிடப்பட்டுள்ளது.

வன்முறைகள் நிறைந்த விண்வெளிப் பிரதேசத்தில், தன்னைத் தற்காத்துக் கொள்ள இந்தப் பறவையானது பின்வரும் பாதுகாப்பு அங்கிகளை அணிந்துள்ளது.

ஒட்சியேற்றக் கவசம் : **(Anti Atomic Oxygen Shield)'**

அலுமினியத்திலான இந்தக் கவசம் ஒட்சியேற்றத்தைக் குறைத்துச் செயற்படுகின்றது.

கதிரியக்க கவசம் : **(Anti Cosimic Ray Shield)**

இது, ரைற்றானியம், தங்ஸ்ரன் ஆகிய உலோகங்களாலான பல கவசப்படைகள் கதிரியக்கத்திலிருந்து பாதுகாக்கின்றன.

3. எரிநட்சத்திர கவசம் : **(Anti Metrorite and Debris Shield)**

இது கடின உலோகங்களாலான கவசப்படைகள், எரிநட்சத்திரக் கற்கள் இதனைத் தாக்காதவாறு வழிசெய்கின்றன.

4. வெப்பக்கவசம் - **(Thermal Shield)**

இது, 2800°c வரையிலான வெப்பத்தினைத் தாங்கக்கூடிய வெப்பக்கவசமாகும்.

விண்வெளியில் இறக்கிவிடப்பட்டதும் ஒரு பெரிய பறவையைப்போல இது அசைந்துசெல்லும். இதன் இறக்கைகள் விசேட கலப்பு உலோகங்களால் ஆனவை. இந்தக் கலப்பு உலோகம் வெப்பநிலைக்கு ஏற்ப தனது வடிவத்தினை மாற்றக்கூடியது.

அத்துடன், பழைய வெப்பநிலை உணரப்பட்டதும், தனது பழைய வடிவத்தை மீளப்பெறக்கூடியது. இதன் காரணமாகப் பூமியின் நிழல் - வரலாற்றுப் பறவையில்படும்போது, அது தன் இறக்கைகளை மடித்துக்கொள்ளும். பழையபடி சூரிய வெளிச்சத்தை உணர்த்தும் இறக்கைகளை விரித்துக்கொள்ளும்.

இவ்வாறாக 50,000 ஆண்டுகளாக விண்வெளியில் வரலாற்றுப் பறவையானது சஞ்சரிக்கும். இந்த நீண்டகாலத்தினைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் - இற்றைக்கு 50,000 ஆண்டுகளுக்கு முன்புதான் ஆதிமனிதர்கள் முதன்முதலில் சித்திரத்தை வரையத்தொடங்கினர் என அறியப்படுவதால், மனித குலத்தின் பரிணாம வளர்ச்சியில் இந்த நிகழ்வானது, மனிதனின் சிந்தனைத் தொழிற்பாட்டில் முக்கியமானதாக விளங்குகின்றது. இந்த வளர்ச்சி கடந்தகாலப்பகுதியின் விம்பமே. இது இற்றைக்கு 50,000 ஆண்டுகாலப்பகுதியை உள்ளடக்கியதாகும்.

இந்தக் காலத்தில் நாம் பூமியில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பெரும்பாலும் இல்லாமல் போய்விடலாம். அதனால், வரலாற்றுப் பறவையின் தகவல்கள் எதிர்காலச் சந்ததிக்கு ஒரு தொல்பொருளாகவே காணப்படும்.

இவ்வாறான ஒரு வரலாற்றுப் பதிவைப் பூமியில் எங்காவது புதைத்து வைக்காது, விண்வெளியில் வைத்திருப்பதற்கும் வலுவான காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பூமியில் ஈராக் யுத்தம் போன்ற, குஜராத் நிலநடுக்கம் போன்ற பேரழிவுகள் ஏதாவது ஏற்பட்டால், இவையாவும் சேர்ந்து அழிந்துபோகலாம்.

இவ்வாறு ஒன்று எதிர்காலத்தில் நிகழுமேயாயினும், விண்வெளியில் எமது வரலாற்றின் ஒரு பதிவு பாதுகாக்கப்படுமல்லவா?

50,000 ஆண்டுகளின் பின் வரலாற்றுப் பறவையானது தனது பயணத்தினை முடித்துக்கொண்டு, பூமிக்குத் திரும்ப ஆயத்தமாகும். பூமியின் அடர்த்தியான ஆகாய மேற்பரப்பை ஊடறுக்கும்போது ஏற்படுகின்ற வெப்பமானது, பறவையின் வெப்பக்கவசம் ஒன்றை விரைவாக வெப்பமேற்றும்.

இது ஒரு பெரிய தீச்சுவாலை போன்ற ஒளிக்கீற்றை வானத்தில் உருவாக்கும். பிரகாசமான வெளிச்சத்துடன் அப்போது வாழ்கின்ற எம் எதிர்கால சந்ததியினரின் கவனத்தை ஈர்த்தபடி, பூமியிலே வந்து விழும்.

இப்படி விழுகின்றபோது ஏற்படும் தாக்கத்தினைச் சமாளிக்கக்கூடிய வகையில் இதனில் தாக்கத்தை உறிஞ்சக்கூடிய கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தப் பறவையானது சிலசமயங்களில் கடலில் வீழ்ந்தாலும், அமிழ்ந்து போகாது மிதக்கக்கூடியது. பாருங்களேன் இந்த நூற்றாண்டின் தொழில்நுட்பத்தின் விந்தைகளை. இவை எம்மை வியக்கவைக்கின்றன அல்லவா.

இதனை முதலில் கண்டெடுப்பவரின் கவனத்தை ஈர்க்கும் முகமாக, இதன் மேற்பரப்பில் பூமியினுடைய வரைபடம் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருக்கும். இதனால், ஆர்வம் உந்தப்படுகின்ற எமது சந்ததியினர் - பறவை தாங்கிவந்த தகவல்களை முழுமையாகப் பெற்றுக்கொள்வார்கள் என்பதனை எதிர்பார்க்கலாம்.

இந்த சுவாரஸ்யமான எங்கள் வரலாற்றை - எதிர்காலத்திற்கு அனுப்புகின்ற திட்டமானது பல கடின ஆராய்ச்சிகளின் விளைவாகவே செயற்படுத்தப்பட்டது. இந்தத் திட்ட வெற்றிக்குப் பாடுபட்ட ஆய்வுக்குழு உறுப்பினர்களான **Jean Marc Philippe, Karin Jestin, veronica Quinn, Luc Gabriel** என்போரை நீங்களும் வாழ்த்துங்கள்.

இவர்களை வாழ்த்தவும் **KEO** பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் நீங்கள் ஆசைப்படுகின்றீர்களா? அப்படியாயின், **www.keo.org** எனும் இணைய முகவரியுடன் இன்றே இணையுங்கள். இன்பங்காணுங்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடுஅல்ல மற்றை அவை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## திருந்துவார்களா அரசியல்வாதிகள்

வருடாந்தம் 210 நாட்கள் பாடசாலைகளை நடத்தவேண்டும் என்று கல்வி அமைச்சின் கொள்கைத் திட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், கடந்த இரண்டாண்டுகளாக 194 நாட்களே பாடசாலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்த ஆண்டில் பாடசாலைகள் நடைபெறவுள்ள நாட்கள் 160 ஆகக் குறைவடைந்திருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திடீரென ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைதான் - பாடசாலை நாட்கள் குறைப்பு, உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பு, பல்கலைக்கழக அனுமதி தாமதம் என்று தொடர்ச்சியான கல்விப் பின்னடைவுகளுக்கு காரணமாக அமைந்தது.

ஏற்கனவே, பரீட்சைத் திணைக்களம் ஏப்ரல் 2 ஆம் திகதி, உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகும் என்று அறிவித்திருந்த நிலையில் அதைத்தெரிந்திருந்தும் ஜனாதிபதி சந்திரிகா அன்றைய தினம் பொதுத் தேர்தல் நடைபெறுமென அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி தனக்கும், தனது கட்சிக்கும் தேர்தலில் வெற்றி கிடைக்கும் என்ற சோதிடர்களின் ஆருடங்களுக்காக - சுமார் 2 இலட்சம் மாணவர்கள் தோற்றும் உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கவோ, பாடசாலை தவணை நாட்கள் வீணாவதைப் பற்றியோ சிறிதும் கவலைப்படவில்லை. எத்தனையோ இலட்சம் மாணவர்கள் எப்படியானால் என்ன, எமது அரசியல் இலாபமே முக்கியம் என்று செயற்படும் இலங்கையின் அரசியல்வாதிகளையிட்டு - அவர்களை தமது பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்த மக்கள் வெட்கித் தலைகுனியவேண்டும்.

நமது அண்டைநாடான இந்தியாவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டும் கூட, தேர்தல் நடைபெறும் திகதி இன்னமும் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படவில்லை.

காரணம் வேறொன்றுமில்லை - அங்கு பாடசாலை தவணை நாட்கள் மற்றும், வருடாந்த பரீட்சைகள் தேர்தல்களால் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதாலேயே தேர்தல் திகதி இன்னமும் அறிவிக்கப்படுவது தாமதமாகிறது.

ஆனால், தெற்காசியாவில் உயர்ந்த கல்வி அறிவு வீதத்தைக் கொண்ட இலங்கையில் - இலட்சக் கணக்கான மாணவர்களின் கல்விநிலைகுறித்து, அற்ப சொற்பகவலை கூடப்படாமல் அரசியல்வாதிகள் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் அறிவிப்பினால் முதலாம் தவணை விடுமுறை இரண்டு கட்டங்களாக - சுமார் இரண்டு மாதம் வரை பாடசாலைகள் மூடப்படவுள்ளதால், கல்விநிலை மிகவும் மோசமடையவுள்ளதுடன் - கல்வியில் பாடசாலைகள் வகிக்கப்போகும் பங்கைவிடவும், தனியார் கல்வி நிறுவனங்களின் பங்கு அதிகரிக்கப்போகிறது.

உயர்தரப் பரீட்சை தாமதமாகத் தொடங்கவுள்ளதால் - இந்த ஆண்டு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினையும் இந்த மாணவர்கள் இழக்கவேண்டியுள்ளது.

பரீட்சை முடிவுகள் வெளியாவதற்கு போதிய அவகாசமின்மையால் ஒக்ரோபரில் ஆரம்பமாகும் பல்கலைக்கழக கல்வி ஆண்டிலும் தாமதம் ஏற்படும்.

இப்படித் தொடர்ச்சியான கல்விப்பின்னடைவுகளுக்கு இந்தத் தேர்தல் வழிசமைத்திருக்கின்றது.

அரசியலில் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் தலைவர்கள் உள்ளவரை, நாட்டின் கல்விநிலையை மேம்படுத்துவது முடியாதகாரியமாகவே இருக்கும். தெற்காசியாவில் கல்வியறிவில் உயர்ந்த மட்டத்தில் இருப்பதாக புள்ளிவிபரங்களை மட்டும் கூறிக்கொண்டிருப்பதே பெரியயளவிலான சாதனையாக அரசியல்வாதிகள் கருதிக்கொண்டிருக்கலாம்.

இன்றைய நவீன உலகில் வெறும் அடிப்படைக் கல்வியறிவு வீதம் மட்டும் முக்கியமான வளர்ச்சி நிலைக்குறிகாட்டியாக இருக்கப்போவதில்லை. அதற்கு மேலாக கல்வியறிவில் உச்சநிலையைத் தொடவேண்டிய தேவை எமது மாணவ சமூகத்திற்கு இருக்கிறது. அதன்மூலமே கல்வியில் எமது நாட்டையும் சர்வதேசத்துடன் போட்டியிடக்கூடிய நிலைக்கு கொண்டு செல்லமுடியும்.

ஆனால், சோதிடம் பார்த்து - ஆட்சியையும் கலைத்து பரீட்சையையும் ஒத்திப்போடுவது போன்ற அரசியல்தலைமைத்துவங்கள் இருக்கும் வரையில், கல்வியில் உயர்ந்த கட்டத்தை இலங்கை எட்டுவதென்பது குதிரைக்கொம்பாகவே இருக்கும்.

# நாடும் நடப்பும்

செய்தி :- புத்தபிக்குகள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.




# அமைச்சர் திலக் மாரப்பனவின் அதிரடிப்படை பாதுகாப்பு நீக்கம்!

## ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும், தற்போதைய போக்குவரத்துத்துறை அமைச்சருமான - திலக் மாரப்பனவுக்கு வழங்கப்பட்டிருந்த அதிரடிப்படைப் பாதுகாப்பு வலக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின் பேரிலேயே, இந்த நடவடிக்கை நேற்றுமுன்தினம் காலை 6 மணிமுதல் அமுலுக்கு வந்ததாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக, அமைச்சர் திலக் மாரப்பன நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். தாம், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பதவி வகிக்கின்றபோதும், தமக்குரிய பாதுகாப்பு குறைக்கப்பட்டமை அநீதியானது என அமைச்சர் திலக் மாரப்பன குறிப்பிட்டார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு, உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என, என்மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எனினும், இது ஏற்றுக்கொள்ள முடியாத குற்றச்சாட்டு. புலனாய்வுப் பிரிவினரின் ஆலோசனைக்கு ஏற்பவே நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவ வீரர்களுக்கோ அல்லது புலனாய்வுப் பிரிவினருக்கோ அச்சுறுத்தல்கள் விடுத்ததில்லை.பாதுகாப்பு அமைச்சராக இருந்த வேளையில், அவர்களின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



பாதுகாப்பு அமைச்சராக விலக்கப்பட்டபோதும், தற்சமயம் அமைச்சரவை அமைச்சராக இருக்கின்ற எனது பாதுகாப்பில் தளர்வு ஏற்படுத்தப்பட்டமை அநீதியானது.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தைக்கு, அவர் பதவியிலிருந்து விலகிய பின்னரும் சுமார் ஒன்றரை வருடமாக மேலதிகமான பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் பலர் அவர்களின் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்ட பின்னரும், 20 முதல் 30 வரையான பொலிஸார் அவர்களின் பாதுகாப்புக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் அமைச்சர் மாரப்பன கூறினார்.

# பௌத்த பிக்குகளை தேர்தலில் நிறுத்தி சிஹல உறுமய தியாகம் செய்துள்ளது

## திலக் கருணாரட்ண அறிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் - முழுக்க, முழுக்க பௌத்த துறவிகளையே தமது கட்சியில் போட்டியிடச் செய்வதன்மூலம், தமது கட்சி பெருந்தியாகம் ஒன்றைச் செய்திருப்பதாக, ஜாதிக ஹெல உறுமய எனத் தமது கட்சியின் பெயரை மாற்றிக் கொண்டிருக்கும், சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ன தெரிவித்தார்.

தமது கட்சியின்கீழ் போட்டியிடுவதற்கு முன்வந்துள்ளதன் மூலம், பௌத்த பிக்குமாரும் நாட்டுக்குப் பெருந்தியாகம் ஒன்றை செய்திருப்பதாக, அந்தக் கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்தார்.

எல்லாள மன்னனுக்கு எதிராகப் போராடுவதற்காக, தமது துறவு ஆடையையே துறந்த தேரப்புத்தபாயாவை, இந்தப் பௌத்த துறவிகள் எமக்கு மீளவும் நினைவூட்டியிருக்கின்றனர்.

நாட்டைக் காப்பதற்காக இவ்வாறு பௌத்த துறவிகள் முன்வந்த பல உதராணங்கள் வரலாற்றில் காணப்படுகின்றன. அழுக்கு நிறைந்ததாக மாறியுள்ள அரசியலை சீராக்குவதற்கு பௌத்த துறவிகள் முன்வந்துள்ளனர். தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஜாதிக ஹெல உறுமயவிடம் தமதுவாக்குகளை இழக்கவுள்ளன.

இதேவேளை, நாட்டின் சகல பாகங்களிலும் இந்தமுறை தேர்தலில் தாம் போட்டியிடவுள்ளதாக தெரிவித்துள்ள, ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் அத்துரெலிய ரத்தின தேரர், தமது சுயவிருப்பத்தினாலன்றி, பல சக்திகளினாலும் அடக்கப்பட்டு வருகின்ற பௌத்த விழுமியங்களைப் பாதுகாப்பதற்காகவே தாம் இந்தமுறை தேர்தலில் குதித்திருப்பதாகவும் கூறினார்.

# இலங்கை வந்த ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் நேற்று நாடு திரும்பினர்

(கொழும்பு)

இலங்கையில் தேர்தல் கண்காணிப்புகளில் ஈடுபடுவதற்காக, ஆரம்ப ஆய்வுகளை நடத்தவந்த ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகள் நேற்றுக்காலை நாடு திரும்பினர். பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் பிரதிநிதிகளும், நேற்று மாலை நாடு திரும்பினர். தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை இந்தப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஐரோப்பிய யூனியனின் 60 உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பான கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். பொதுநலவாய நாடுகள் 15 உறுப்பினர்களை அனுப்பிவைக்கவுள்ளது.

இதற்கான சம்மதத்தினை தேர்தல் ஆணையாளரிடம் இரு அமைப்பின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். தேர்தல் ஆணையாளர் - பொதுநலவாய நாடுகளின் 15 உறுப்பினருக்குப் பதிலாக, 20 உறுப்பினர்களை அனுப்புவதற்குரிய கோரிக்கையை அந்த அமைப்பிடம் கேட்டுள்ளார்.

இதேவேளை, அவசர தேர்தல் ஒன்றுக்குரிய காரணங்களை தேர்தல் ஆணையாளரிடம் இரு அமைப்புப் பிரதிநிதிகளும் கேட்டுக்கொண்டுள்ளனர். இலங்கையில் காணப்படும் அரசியல் முறுகல் தொடர்பாகவும், இதனால் இந்த அவசரதேர்தல் ஒன்று முன்னெடுக்கப்பட்டமை தொடர்பாகவும், தேர்தல் ஆணையாளர் அவர்களுக்கு விளக்கிக்கூறினார்.

பொதுத்தேர்தல் தொடர்பான கண்காணிப்பில் ஈடுபடவுள்ள குழுவினர், இது தொடர்பான ஆய்வுகளை விரைவில் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல் ஆணையாளர் பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் போன்ற நாடுகளிடம், தேர்தல் கண்காணிப்பு தொடர்பாக ஆட்களை அனுப்புமாறு கேட்டுள்ளார். (01)

வாரநோக்கு - யாழவன்.






# அவசியமாகத் தேவைப்படும் பரந்துபட்ட தமிழ் கூட்டமைப்பு

கடந்தவாரம் - பலவிதமான செய்திகளையும, அதிர்ச்சிகளையும் தந்துவிட்டு அகன்றிருக்கின்றது. அந்தவேளையில் புதியதொரு தெம்பையும் அளித்தும் உள்ளது. இலங்கையின் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டதும் - அரசியற் கட்சிகளும், அதன் தலைவர்கள், உறுப்பினர்கள் பலரும் விழித்தெழுந்திருக்கிறார்கள். வரப்போகும் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது? தேர்தலில் வெற்றிபெறவேண்டுமானால் யாரோடு கூட்டுச்சேரவேண்டும். என்றெல்லாம் ஆராய்ந்து ஆலாய்ப்பறந்து கொண்டிருக்கிறார்கள்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் உடன்படிக்கை ஒன்றை - ஆட்சிமாற்றமொன்றை இலக்காக வைத்து ஏற்படுத்தியுள்ளன. இந்த இரு கட்சிகளினதும் கூட்டமைப்பு தொடர்பாக அரசியல் அரங்கிலே அதிக கவனம் கொடுத்து பேசப்பட்டாலும், இவற்றோடு ஒப்பிடுவதைக் காட்டிலும் வலுமிக்க சில கூட்டமைப்புக்களை உருவாக்குவதற்கான முயற்சிகளும், அரசியற் தளத்திலே நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. கூட்டமைப்பானது - ஆட்சியை கைப்பற்றுமாகவிருந்தால், அது நாட்டிற்குப் பேரிடியாகவே அமையும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இந்தக் கூட்டமைப்பின் பங்குதாரரான ஜே.வி.பியினர், ஆட்சியை கைப்பற்றுவதற்கு முன்னதாகவே அது தொடர்பான பல கனவுகளைக் கண்டு, அறிக்கைகளையும் கருத்துக்களையும் வெளியிட்டவண்ணமுள்ளனர்.

நாம் ஆட்சிக்குவந்தால் புலிகளுக்கும், ரணிலுக்கும் இடையே செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்கி விடுவோம் என அடிக்கடி சந்தர்ப்பம் கிடைக்கும போதெல்லாம் வெளிப்படுத்துவதற்கு ஜே.வி.பியினர் தவறுவதில்லை. அவர்களது ஆட்சிக் கனவுகள் சமீபநாட்களாக இன்னும் பலபடி மேலே சென்றிருக்கிறது.

அதனாலே தான், ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தவுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைதுசெயது சிறையில் அடைப்போம் எனவும் அலட்டத் தொடங்கியுள்ளனர். இவ்களது இந்தப் பூச்சாண் டித்தனங்களுக்குச் சிங்கள மக்கள் எடுபடுவார்களாக இருந்தால், நாடு உலகப்படத்திலிருந்து இல்லாமற்போனாலும் ஆச்சரியப்படவேண்டிய அவசியமில்லை.

நாட்டைப் பேரழிவிலிருந்து பாதுகாக்க வேண்டுமாகவிருந்தால், சிங்களமக்கள் தெளிவான அரசியல் சிந்தனையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டியது அவசியமான தாகவேயுள்ளது. ஆனால், இந்த விடயத்தில் தமிழ்மக்கள் மிகுந்த அவதானமாக இருக்கிறார்கள் - இருக்கவேண்டும்.

ஏனெனில், கடந்த தேர்தலின்போது வடக்கு - கிழக்கு பகுதிவாழ் தமிழ்மக்களுள் பெரும்பான்மையானோர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எனும் நான்கு கட்சிகள் இணைந்த அமைப்புக்கு தமது வாக்குகளை அளித்து, தாம் சமாதான விரும்பிகள் எனவும், விடுதலைப் புலிகள்தான் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றும் உலகிற்குச் சொல்லியிருந்தார்கள்.

அதனை அநேகமான சர்வதேச நாடுகளகூட ஏற்றுக்கொண்டு, சமாதான சமரச முயற்சிகளில் பரஸ்பர இணைப்பாளர்களாகக் கடமை புரிந்து வருகின்றனர். ஆனால், இதனை ஏற்க மறுத்த அல்லது விரும்பாத பேரினவாத அரசியல் கட்சிகள் - தமது சாக்கடை அரசியல் சண்டித்தனத்தைச் சாட்டையாக்கி, மக்களின் முதுகிலே சவாரி செய்கிறார்கள். இதனாலேயே இருவருட காலப்பகுதிக்குள் இரு நாடாளுமன்றத் தேர்தல்களைச் சந்திக்கவேண்டிய இக்கட்டானநிலைக்கு நாடு தள்ளப்பட்டிருக்கிறது.

இந்த முறை தேர்தலிலும் தமிழ் மக்கள் தமது ஏகோபித்த முடிவாகக் கடந்த தேர்தலில் சொன்னதையே பெரும்பகுதியானவற்றைத் திருப்பியும் சொல்லப்போகிறார்கள். இதனை ஆடசிக்குவரும் எந்த கட்சியாயினும் சரி ஏற்றுக் கொண்டேயாகவேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ள வைப்பதற்காகத் தமிழ்க்கட்சிகள் தமது பேரம்பேசும் வலுவை அதிகரிக்கவேண்டியுள்ளது.

இதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டியுள்ளது. இதன் காரணமாக முன்னர் நான்கு கட்சிகள் மாத்திரம் அங்கம்வகித்த தமிழ்தேசியக் கூட்டமைப்பிலே வேறு பல புதிய கட்சிகளையும் இணைப்பதற்கான நடவடிக்கைகளைப் பல்வேறுபட்ட தரப்பினரும் எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு பரந்துபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்று அமைக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. ஆனாலும், இது விடயத்தில் சில கட்சிகள் சற்றுப் பின்வாங்கி நிற்கின்றன. ஏனெனில், தமது கட்சியின் தனித்துவம் இதன் மூலமாக இழக்கப்பட்டுவிடலாம் என அவர்களுக்கு உள்ளூர ஒரு அச்சம்.

குறிப்பாக மலையக மக்கள் முன்னணியும, மேல்மாகாண மக்கள் முன்னணியும் இந்த பரந்துபட்ட கூட்டமைப்புத் தொடர்பாக முடிவெடுப்பதிலே சற்று தாமதித்து வருகின்றன. மலையக மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையிலே அதன் தலைவராக உள்ள அமைச்சர் சந்திரசேகரன், தான் அமைச்சுப்பதவியில் தொடர்ந்து நீடிப்பதனையே இலக்காகக் கொள்வார்.

இது தமிழ்த்தேசிய கூட்டமைப்பிலே




அங்கம்பெறும் போது சாத்தியப்படக்கூடிய விடயமல்ல. ஆனால், சந்திரசேகரன் கூட்டமைப்பை தோற்றுவிப்பதிலேயே சற்று உறுதியாகவே இருந்துவருகிறார்.

மேல்மாகாண மக்கள் முன்னணியும் கூட்டமைப்பு அமைப்பதற்குத் தயாராகவுள்ளது. ஆனால், அது யாருடன் கூட்டமைப்பை அமைக்கப்போகிறது என்பது இதுவரை தெளிவாக்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கூட்டணி அமைக்கும் எண்ணமும் மனோகணேசனின் மேல்மாகாண மக்கள் முன்னணிக்கு உண்டு. இது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளும், கருத்துப் பரிமாறல்களும் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த நிலையிலே, ஓரிரு நாட்களுக்கு முன்னர் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை அமைச்சர் சந்திரசேகரனும், மனோகணேசனும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அந்த கலந்துரையாடல்களின் விளைவாக ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும், மிக விரைவிலே இறுதி முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எது எவ்வாறிருப்பினும், பரந்துபட்ட தமிழ்க் கூட்டமைப்பானது இன்று அவசியமானதொன்றாகவே உள்ளது.

நாட்டின் சனத்தொகையிலே கிட்டத்தட்ட எண்பது சதவீதத்தை வகிக்கும் சிங்கள மக்களை - நாடாளுமன்றத்திலே ஆகக்கூடிய மூன்று கட்சிகளே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவே சிங்கள மக்களின் பிரதான கட்சிகளாகும்.

ஆனால், சனத்தொகை வீதத்திலே இருபது சதவீதத்தை அண்மித்துள்ள தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்திலே பத்துக்கு மேற்பட்ட கட்சிகள் உள்ளன. அதிலும் ஈழத்தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஏராளமான கட்சிகள். இந்த நிலையில், கடந்த காலங்களில் ஒரே தலைமைத்துவத்தின்கீழ் நின்ற முஸ்லிம் மக்களும் இன்று மூன்று தலைமைத்துவத்தின் கீழே கட்சி ஆதிக்கங்களுக்கு ஆட்பட்டு நிற்கிறார்கள். இந்தநிலையில் புதிய முஸ்லிம் கட்சிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆக ஒட்டுமொத்தத்தில் தமிழ் பேசும் மக்கள் தனித்தனித் தலைமைகளின்கீழ் ஏராளமான கட்சிகளின் ஆதிக்கத்திற்குள் உட்பட்டு, தமது உரிமைகளை இழந்து நிற்கும் நிலை தோன்றியுள்ளது. இவர்களது இந்த ஒற்றுமையீனத்தை தமது அரசியலுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சிங்கள அரசியல் தலைமைகள் சிறுபான்மையினம் எனும் அடக்குமுறைக்குள் தமிழ்பேசும் மக்களை உட்படுத்தி வருகின்றார்கள்.

இந்தநிலை மாறுவதற்குத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இணைந்து நின்று தமது குரலை வெளிபபடுத் தினால், தனித்து நின்று ஆட்சியமைக்கும் வாய்ப்பு சிங்கள கட்சிகளுக்கு ஒருபோதும் கிட்டவேகிட்டாது. ஆனால், இதற்குத் தமிழ்த் தரப்பு தயாராகவில்லை.

முஸ்லிம் மக்கள் மூன்று பிரிவாகப் பிரிந்து நின்று மோத, தமிழ் மக்களும் ஆளுக்கொரு திசையிலே செல்வது தப்பான விளைவுகளையே தோற்றுவிக்கும். இதனால், மலையகம் உள்ளிட்ட தமிழ்க்கட்சிகள் அனைத்தும் தமக்குள் ஒரு கூட்டமைப்பைத் தோற்றுவித்து, இந்தத் தேர்தலிலே களம் இறங்கப்போகின்றன. அவ்வாறு களமிறங்க வேண்டுமென்பதே சாதாரண மக்களது எதிர்பார்ப்புமாகும்.

இந்த எதிர்பார்ப்பு நிறை வேறுமாகவிருந்தால், நிச்சயமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முப்பதிற்கு மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கு வாய்ப்புக்களுண்டு.

எனவே, அரசு அமைப்பதற்கு தமிழ் தேசிய கூட்ட மைப்பு தேவையானதொன்றாக மாறும். இதன்மூலம் பேரம்பேசும் ஆற்றலை அதிகரித்து உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால், இதற்கு தற்போது அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் தொழிலாளர் காங்கிரஸ் தயாராகவில்லையென வெளிப்படையாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆட்சி அமைக்கும் கட்சியுடனேயே தாம் இணையப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பில் ஏற்கனவே அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலேயே போதியளவு ஒற்றுமையில்லாத போது, எவ்வாறு கொள்கை வேறுபாடுடைய கட்சிகளுக்கிடையே ஒற்றுமையை இலகுவாகக் கொண்டுவரமுடியும். இது சிந்திக்கப்படவேண்டிய விடயமாகும்.

இங்கு நாம் குறிப்பிடமுற்படுவது யாதெனில் - தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி - தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு முரணாக நடந்துகொள்வதுடன், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்கையும் கடைப்பிடித்துவருகின்றார்.

இந்தமுறை தேர்தலைத் தமிழ்மக்களின் உரிமையைக் கோரும் தேர்தலாக மாற்றமுனையும் நடவடிக்கைகளுக்குப் பல தரப்புகளிடமிருந்தும் சாதகமான சமிஞ்ஞைகள் கிடைக்கும்போது, வேறு ஒரு முக்கியமான சம்பவமும் கடந்தவாரம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் - தான் அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொள்வதாக அறிவித்துள்ள அறிவிப்பு பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. அவர் முழுமையாகவே அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டாரா? குறுகிய கால மகேஸ்வரனின் அரசியல் வாழ்க்கை - மிகக்குறுகிய காலத்திலேயே முடிவிற்கு வந்துள்ளதா? என்றெல்லாம் கேள்விகள் பல அடுக்கடுக்காய் எழுந்துள்ளன.

இந்த இடத்திலே ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அமைச்சர் மகேஸ்வரன் தனது திடீர் அறிவிப்பு முடிவிலே "குடாநாட்டு அரசியலிலிருந்து தான் ஒதுங்கிக்கொள்வதாகவே அறிவித்துள்ளார். சிலவேளைகளில் அவரது அரசியற் பணிகள் வேறு ஒரு தளத்திலே தொடருவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியையும், ரணிலையும் பொறுத்தவரையிலே தமிழ் மக்களுடான நட்புறவின் பாலமாக இருந்து வந்தவர் மகேஸ்வரன். எனவே, அந்தப் பாலத்தை விரைவிலே தகர்த்துக்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சி விரும்பாது. ஆகவே, அமைச்சர் மகேஸ்வரனுக்குத் தேசியப் பட்டியல் மூலமாகச் சில சந்தர்ப்பங்களிலே நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

**குறுகிய கால தனது அரசியல் வாழ்க்கை மூலம் நிறைய தேடிக்கொண்ட மகேஸ்வரன் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ள பெரும்பாலும் விரும்பமாட்டார். சில சந்தர்ப்பங்களில் மகேஸ்வரனுக்கு ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தல் களத்திலே நிற்பது இலகுவாக இருந்தாலும், வாக்கு வேட்டையிலே ஈடுபடுவதென்பது முடியாத காரியமாகவும்**

மகேஸ்வரன் - அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொள்ள பெரும்பாலும் விரும்பமாட்டார் சில சந்தர்ப்பங் களில் மகேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தி தேர்தல் களத்திலே நிற்பது இலகுவாக இருந்தாலும், வாக்குவேட்டையிலே ஈடுபடுவதென்பது முடியாத காரியமாகவும் அமையலாம்.

அமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதியிலே மகேஸ்வரன் தனது சொந்த இடமான காரைநகருக்கே அதிகமாகச் செலவழித்துள்ளார்.

அத்தோடு, சில கஷ்ரப்பிரதேசங்களுக்கும் மேலோட்டமாக கிள்ளித் தெளித்துள்ளார். இதைவிட, குடாநாட்டுக்கு அமைச்சர் மகேஸ்வரன் அதிகமாக எதுவும் செய்யவில்லை. இந்தநிலை அவருக்குச் சிலவேளைகளிலே அச்சத்தை உண்டு பண்ணி மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தன்னை ஒதுக்குவதற்கு முன்னால், தானாகவே ஒதுங்கிக் கொள்வது மேலானது என எண்ணவைத்திருக்கலாம்.

இதேவேளை, மகேஸ்வரன் சம்மதித்தால், தமிழ்தேசியக் கூட்டமைப்பிலே இடமளிக்க முடியுமென தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். இது கவனிக்கத்தக்க விடயம். ஏனெனில் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாகவே மகேஸ்வரன் ஒதுங்கிப் போயுள்ளதாகச் சிலர் பிரசாரம் செயவதற்குத் தயாராகவுள்ளனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனேயே பிரசார நடவடிக்கைகளும் ஆரம்பமாகிவிட்டன. கடந்தவருட தேர்தல் பதாதைகளைத் தூசு தட்டி கட்டியுள்ளார்கள் ஈ.பி.டி.பியினர். குடாநாட்டிலே தற்போது ஈ.பி.டி.பியினரது நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகிறது. கட்சி அலுவலகங்களும் களைகட்டத் தொடங்கிவிட்டது.

தேர்தல் திருவிழா வந்து விட்டது. இனி நாம் தான்... கடவுளெனப் பலர் வரத் தயாராகிவிட்டார்கள்.

ஆனால், தமிழ் மக்கள் இந்த முறை மிகவும் தெளிவான அரசியல் சிந்தனையோடு இருக்கிறார்கள்.

பலருக்கு இந்தத் தேர்தல் நல்ல பாடத்தைப் புகட்டிவிடும் வாய்ப்புள்ளது. எது நடக்கும் என்பது தற்போது ஓரளவு எதிர்வு கூறக்கூடியதாகவிருந்தாலும், நடக்கும்போது, காண்பதிலேதான் சுவாரஸ்யம் உள்ளதல்லவா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# இந்திய மிக் விழுந்து நொருங்கியதில் மூவர் பலி; 14 பொதுமக்கள் காயம்!



(புதுடெல்கி)

குஜராததின் தென்பகுதிக் கிராமமான லக்கா பவாலியில் ரஷ்ய தயாரிப்பு இந்தியப் போர் விமானமான மிக் 21 விழுந்து நொருங்கியதில் மூவர் உயிரிழந்தனர். 6 சிறுவர் உட்பட 14 பொதுமக்கள் காயமடைந்தனர்.

மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் வீழ்ந்து நொருங்கிய இரண்டாவது போர் விமானம் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

மிக் 21 விமானத்தை செலுததிய விமானி பாதுகாப்பாக வெளியேறியுள்ளதாகவும், இந்த விமானம் வெடிபொருட்களை ஏற்றிச்சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானம் ஓடுபாதையிலிருந்து புறப்பட்டு 10 நிமிடங்களில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட மிக் விமானங்களின் விபத்துக்கு பராமரிப்பில் ஏற்பட்ட குறைபாடுகளே காரணமென ரஷ்ய விமான விற்பன்னர்கள் தெரிவித்தனர்.

இதனால் புதிய விமானங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதேவேளை சேவையில் மேலும 800 மிக் விமானங்கள் ஈடுபட்டு வருவதாகவும் அறியவருகிறது.

## 5 தீவிரவாதிகள் மீது பிரிட்டன் விசாரணை!

(லண்டன்)

குவண்டனோமோவின் சிறையில்லிருந்து விடுவிக்கப்பட்ட தீவிரவாதிகள் ஐவர் மீது பிரிட்டிஷ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தத் தீவிரவாதிகள், பிரிட்டனின் பாதுகாப்பிற்கு எந்தவிதத்திலும் அச்சுறுத்தலாக அமையமாட்டார்களென பிரிட்டிஷ் உள்நாட்டு அமைச்சர் 'டேவிட் பிளங்கர்' தெரிவித்தார்.

ஆனால், வெளிநாட்டமைச்சர் "ஜாக் ஸ்ரோ" இவர்களைக் கைதுசெய்வதற்கான சாத்தியங்களை பொலிஸார் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்தார்.

குவண்டனோமோவில் 9 பிரிட்டன் பிரஜைகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும், தடுத்துவைக்கப்பட்டுள்ள நான்கு பிரிட்டிஷ் பிரஜைகளை விடுவிப்பதில் அமெரிக்காவும் பிரிட்டனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருகின்றன.

தலிபான், அல்கொய்டா தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களே ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் கைது செய்யப்பட்டு, இந்த குவண்டனோமோ சிறையில் தடுத்துவைக்கப்பட்டவர்களாவர்.

## ஈராக்கியரிடம் ஆட்சி அதிகாரங்களை ஜூன் மாதம் வழங்க அமெரிக்கா திட்டம்!



ஈராக்கின் ஆட்சி அதிகாரங்களை எதிர்வரும் ஜூன் மாதம் முதல் ஈராக்கியரிடமே வழங்குவதற்கு அமெ ரிக்கா திட்டமிட்டுள்ளது. ஆகவே, ஜூன் மாதத்துக்கு முன்னர் தேர்தல் ஒன்றினை ஈராக்கில் நடத்துவதற்கான சாத்தியங்கள் இல்லையென ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக ஆட்சியதிகாரம் ஈராக்கியர்களிடம் ஜூன் மாதத்துக்கு முன்னரே வழங்கப்படுதல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பொன்றிடம் அதிகாரங்களை வழங்குவதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்காவின் இந்த யோசனைக்கு ஈராக்கில் வாழும் ஷியா முஸ்லிம்களிடமிருந்து பலமான எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. ஈராக்கில் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியங்களை ஆராய்வதற்கு லாடர் பகிமி தலைமையிலான ஐக்கிய நாடுகள் தூதுக்குழு சில வாரங்களுக்கு முன் ஈராக் சென்றிருந்தது.

இந்தக் குழுவின் அறிக்கையின் மூலம் தேர்தல் நடைபெறும் வரை ஈராக்கியர்களும், ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகிகளும் இணைந்து காபந்து அரசையோ அல்லது இடைக்கால அரசையோ நிறுவலாம் என கோபி அனான் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே - திட்டமிட்டவாறு ஜூன் 30 ஆம் திகதி ஆட்சி அதிகாரம் ஈராக்கியர்களிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## உகண்டாவில் மனிதப் படுகொலைகளைப் புரிந்த கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்!

உகண்டாவில் மனிதப் படுகொலைகளை மேற்கொணடவர்கள் என சந்தேகிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற மனிதப் படுகொலைகளில் எட்டு இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

மனிதப் படுகொலைகளுக்கும், விடுவிக்கப்படவுள்ளவர்களுக்கும் இடையே நேரடியான தொடர்புகள் இல்லையென்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொணட பிரதம வழக்கறிஞர் ஜீன் டி டியூ தெரிவித்தார்.

உலக நோக்கு



மனிதப் படுகொலைகளின் பத்தாவது ஆணடு நிறைவிலேயே இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இந்தக் கொலைகளில் நேரடியாகத் தொடர்புள்ள குற்றவாளிகள் உகண் டாவின் தலைநகர் சிக்காலியில் சர்வதேச நீதிமன்றத்தால் விசாரிக்கப்படவுள்ளனர். இதனிடையே, 18 குற்றவாளிகளுக்கு எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையை சர்வதேச நீதிமன்றம் விதித்தது.

# தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவிலிருந்து.....













நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி குடாநாட்டு நிலை குறித்து ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகளுக்கான ஆசியப்பிராந்திய செயற்பாட்டு மையத்தின் செயலாளரும், இலங்கைக்கான இணைப்பாளருமான பஸ்ரியன் பெர்னாண்டோ நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் சங்கத்தின் தலைவர் எஸ்.செல்வராஜாவை நேற்றுக்காலை சந்தித்த அவர், காணாமற்போனோர் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 'கியுடெக்' நிறுவனத்திற்கு விஜயம் மேற்கொண்டு பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக கலந்தாலோசித்ததுடன், அவர்களது பணிகள் பற்றியும் கேட்டறிந்தார்.

அவரிடம் யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோர் பற்றியதகவல்கள் ஏதேனும் பெற்றுக்கொடுக்க முடியுமா என 'கியுடெக்' இணைப்பாளர் வணபிதா ஜெயக்குமார் அடிகளார் கேட்டுக்கொண்டதற்கு, தான் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிததார். (ப)

# ஜப்பானிய பேராசிரியர் யாழ்ப்பாணம் விஜயம்!

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் பேராசிரியர் கிறிஸ்ரியன் ஆவாட்ஸ் நேற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம்செய்து தேர்தல் நிலவரம் பற்றி ஆராய்ந்தார்.

நேற்றுமுன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களைச் சந்தித்து தற்போதைய நாட்டு நிலவரம் குறித்தும், நடைபெறவுள்ள தேர்தல் நிலவரம் குறித்தும் ஆராய்ந்த அவர் - நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்து மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டார்.

ஜப்பானிய பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான இவர் இலங்கையின் அரசியல் சூழல் பற்றிய தனது ஆய்வின் நிமித்தமே அவர் இலங்கை வந்ததாகவும் ஜப்பானிய மாணவர்களுக்கு இலங்கையின் நிலவரம் குறித்து அவர் கற்பித்து வருவதாகவும் தெரியவருகிறது.

# மதனராஜா குழுவினர் நெடுந்தீவுக்கு விஜயம்!

ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மதனராஜா குழுவினர் நேற்றுக் காலை பதினொரு மணியளவில் பொலிஸாரின் பாதுகாப்புடன் பயணிகள் படகு மூலம் நேற்றுக்காலை நெடுந்தீவுக்குச் சென்றனர்.

இவர்கள் உதவி அரசாங்க அதிபர், பாடசாலை அதிபர்கள், சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஆகியோரை அலுவலகங்களுக்குச் சென்று சந்தித்தார்.

இந்த அதிகாரிகளுடனான சந்திப்பில் எதிர்வரும் தேர்தலில் தமது கட்சி போட்டியிடவுள்ளதாகவும் அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

பின்னர் மாலை 4 மணியளவில் இவர்கள் நெடுந்தீவில் இருந்து கடற்படையினரின் டோறா படகில் திரும்பிச் சென்றனர். (113)





விடுதலைப் புலிகளின் மோட்டார் சைக்கிள் படையணியின் சாகசங்களைப் படங்களில் காணலாம்.

### காணாமற்...

பட்டு இதுவரை தகுந்த பதில் கிடைக்கவில்லை. காணாமற்போனோர் தொடர்பாக தகுந்த பதிலை பெற்றுத்தருமாறு கோரியே காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கத்தினர் நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மறியற்போராட்டம் சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றது. யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி அங்கு வருகை தந்து இந்தப் போராட்டம் தொடர்பாக மனித உரிமைக்குழு ஆணைக்குழு அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தி முடிவு ஒன்றைப் பெற்றுத்தருவதாகக் கூறியபின்னர் போராட்டம் கைவிடப்பட்டது.

### யாழ்.மாவட்ட...

பொதுஅமைப்புக்களின் சார்பில் சூ.சிறில், ப.கனகலிங்கம், பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன், மா.க.ஈழவேந்தன், சிவநேசன் ஆகியோரும்,

வேட்பாளர்களாக பெயர்குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் இவர்களில் 12 வேட்பாளர்கள் நிறுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வேட்பாளர்களாக நிறுத்தப்படவுள்ளோர் தொடர்பாக நேற்றிரவுவரைஅரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்களும் நிலவியது குறிப்பிடத்தக்கது.

### உண்ணாவிரதப்...

உள்ள இந்திய மீனவர்களையும், தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர். இதன் பின்னர் காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்துறை போன்ற பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளையும் இவர்கள் பார்வையிட்டனர்.

தற்போது யாழ்.சிறைச்சாலையில் உள்ள இந்திய மீனவர்களில் ஏழுமாதத்திற்கு முன்பு பிடிக்கப்பட்டவர்களும், ஒரு வாரத்திற்கு முன்பு பிடிக்கப்பட்டவர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிறுத்தாத வாகனம் மீது சூடு வென்னப்புவவில் ஒருவர் பலி!

(கொழும்பு)

புத்தளம் மாவட்டம் வென்னப்புவ பகுதியில் சோதனைச்சாவடி ஒன்றில் நிறுத்தாமல் சென்ற வாகனம் ஒன்றின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுக்காலை வென்னப்புவ சாலியம்குளம் என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த வாகனத்தில் ஐந்து பிரயாணிகள் இருந்ததாகவும், இரண்டு கத்திகள் மற்றும் கிரனேட் என்பன இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# அம்பாறை உள்ளூராட்சி தேர்தல் ஒக்ரோபர் 23 இற்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

அம்பாறை நிர்வாக மாவட்டத்தில் கல்முனை மாநகரசபை உள்ளிட்ட ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 23 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

கல்முனை மாநகரசபை மற்றும் சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், திருக்கோவில், பொத்துவில் பிரதேசசபைகளுக்கான உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் ஒக்ரோபர் 23 ஆம் திகதி நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஏழு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், இன்று நடைபெறும் என்று முன்னர் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்த போதும், உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கையடுத்து இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

# போட்டியிலிருந்து விலகும் லலித் கொத்தலாவல!

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டிருந்த சிலிங்கோ நிறுவனத் தலைவர் லலித் கொத்தலாவல தனது முடிவை மாற்றிக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமேல் மாகாண அபிவிருத்தி சபைத்தலைவராக கொத்தலாவல நியமிக்கப்பட்ட போதே இவர் குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிடுவார் என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

அதுபோலவே, இவர் குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிடுவாரென ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்தது. அத்துடன், தொடங்கஸ்லந்த தேர்தல் தொகுதியின் அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

ஆனால், கொத்தலாவல - புத்த பிக்குகளுடன் நேரடியாக தான் தேர்தலில் போட்டியிட்டு அவர்களை எதிர்க்க விரும்பவில்லை எனத் தெரிவித்தாக அவரது நண்பர் சிங்கள இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவித்தார். இவரது இந்த விலகல் தொடர் பாக வண.கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவிக்கையில்,

லலித் கொத்தலாவல கிறிஸ்தவ அடிப்படைவாதிகளுக்கு ஆதரவானவர் என்பது தெரிந்த விடயம். இவர் உண்மையில் போட்டியிலிருந்து எங்களைக் காரணங்காட்டி விலகுவாராயின் எமது நிலையினை நியாயப்படுத்தும் ஒன்றாகவே இருக்கும். இதுவே எமது முதல் வெற்றி. வேட்புமனுவைத் தாக்கல் செய்ய முன்னரே நாம் வெற்றியடைந்து விட்டோம் என்றார்.

### மோட்டார் ...

டார் சைக்கிள் அணிவகுப்பு மரியாதையை புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஏற்றுக்கொண்டதாக வன்னி தகவல்கள் தெரிவித்தன.

இந்த நிகழ்வில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், மோட்டார் சைக்கிள் படையணியின் தளபதி மணியரசன் மற்றும் புலிகளின் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள் மற்றும் போராளிகள், தமிழீழ காவல்துறையினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### சம்பந்தன் தலைமையில்...

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளினதும் தலைவர்கள், தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் திருமலைமாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தப்பட்டியலில் முன்னாள் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம், கௌரிமுகுந்தன் ஆகியோர் கூட்டணி சார்பிலும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் சதா. சண்முகநாதனும், ரெலோ சார்பில் விக்னேஸ்வரனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி சார்பில் ரகுநாதனும் இடம் பெற்றுள்ளனர்.

மேலும் திருமலை மாவட்ட பட்டியலில் முஸ்லிம் வேட்பாளர் ஒருவரும் இடம்பெறவுள்ளார் எனவும் அவரின் பெயர் இன்று அல்லது நாளை வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1592 திகதி: 20.02.2004

வெற்றி இலக்கங்கள்

| S | 0 | 8 | 2 | 0 | 9 | 4 |
|---|---|---|---|---|---|---|

### கிளிநொச்சியில் கோலாகலமாக...

விளையாட்டு மைதானத்தை, அடைந்ததும் அங்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் இந்த மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டன. தொடர்ந்து தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார். தொடர்ந்து அந்தந்த மாவட்ட விளையாட்டுத்துறைக் கொடிகளை மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள், பொறுப்பாளர்கள் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்பட்டது. ஒலிம்பிக் தீபத்தை ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயாந்தன் ஏற்றிவைத்து அதை ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றி 1958 ஆம் ஆண்டு உயரம்பாய்தலில் இலங்கைக்கான முதலாவது தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்த முதலாவது தமிழராகிய எதிர்வீரசிங்கத்திடமும் மற்றும் தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு இங்கிலாந்து மண்ணில் வெற்றிகளைப் பெற்றுத்தந்த தமிழீழ வலைப்பந்தாட்ட அணித் தலைவி ராதிகாவிடமும் வழங்க - அவர்கள் ஒலிம்பிக் தீபங்களை ஏந்தியவாறு விளையாட்டு மைதானத்தை வலம் வந்தனர்.

இவற்றைத் தொடர்ந்து ஆசியுரையினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை நிகழ்த்தினார். அடுத்து சிறப்புரைகளை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா. தமிழன்பனும் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பண்பாட்டு நிகழ்வுகளும், குருகுலம் காந்தி நிலைய சிறார்களின் கோலாட்டம், காவடி, கராத்தே, ஆகிய நிகழ்வுகளும், கம்படி, தீப்பந்த விளையாட்டு, கொம்பு, போன்ற சாகச நிகழ்வுகளும், நிகழ்த்தப்பட்டன. இதில் சிறுவர்களும், முதியோர்களும் இடம்பெற்றிருந்தனர்.

தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவிகளின் அபிநய நிகழ்வும், அதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக ஜிம்னாஸ்ரிக் கழக அணியினதும், கடற்புலிகளின் அணியினரதும், யாழ் ஜிம்னாஸ்ரிக் கழக அணியினரதும், நிகழ்வுகள் நடைபெற்றன.

தொடர்ந்து பிற்பகல் போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.